பதிவு எண் M. 4900. 16-பக்கங்கள்.

# குடி அரசு

நிறுவியது: 1924.

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 23 } ஈரோடு 24-9-1949 சனிக்கிழமை } மலர் 3.

# வாழப் பிறந்தவர்கள்!

★

வாழ்க்கை, வசந்த காலத்தின் இனிய தென்றலை வாரி வீசும் வண்ணமலர் சோலை அல்ல. நறுமணத்தை அள்ளி வீசும் புது மலர்கள் பூத்துக் குலுங்கும் இன்பப் பாட்டையும் அல்ல. அது மிகப் பலருக்குக் கல்லும் முள்ளும் நிறைந்த காட்டுப் பாதையாகத் தான் இருக்கிறது. அங்கு தென்றல் வீசுவதில்லை: சூறாவளியும்—சுட்டுத் தாக்கும் அனற்காற்று தான் வீசுகிறது. வாழ்வு, நம்மில் பலருக்கு சுவை மிக்க கனியல்ல—தொட்டாலும் கசக்கக்கூடிய எட்டிக்காய்தான்!

நாம் வாழப் பிறந்தவர்கள்—வாழ வேண்டிய கடமைப்பட்டிருப்பவர்கள். எனினும், வாழ்கிறோம் என்று சொல்ல முடியுமா? தினம் தினம் அணு அணுவாக இறந்து கொண்டல்லவா இருக்கிறோம்? வருங்கால வாழ்விலேனும் வளம் பெற முடியும் என்ற நம்பிக்கை—நல்லொளி தோன்றுவதால்தான் இன்றளவு வாழ்ந்து கொண்டிருக்கிறோம்—இனியும் வாழ விரும்புகிறோம். இன்றைய நிலையில் நாம் நம்வரைக்கும் ஓர் நடைப் பிணம்தான். வாழ்க்கைத் துறையில் மேல் நிலையில் இருப்பவர்களுக்கு நாமோர் சோக சித்திரம். நாட்டிற்கோர் சுமைக்கல். ஏன் இந்த நிலை? என்றுதான் நீங்குமோ நம்ம குறை?

வாழவேண்டும் என்று விரும்புவதும், ஆசைப்படுவதும் உயிர் வர்க்கத்தின் இயற்கைப் பண்பு. உலகில் வாழ்கின்ற எண்ணற்ற உயிரினத்தில் உயர்ந்த நிலையில் உள்ள மனித உள்ளத்தில் இந்த எண்ணமும் ஆசைகளும் மண்டிக்கிடக்கின்றன. வாழ்க்கைப் பாதையில் குறுக்கிடுகின்ற எவ்வளவோ பல இடற்பாட்டிற்கும், துயரத்திற்கும் ஈடுகொடுத்து விட்டு மனித சமுதாயம் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்து வந்திருக்கிறது. இல்லையெனில் இன்று உலகில் மனித வர்க்கமே பூண்டோடு ஒழிந்து போயிருக்கும்.

வாழ்க்கை வெறும் விளையாட்டு அல்ல—அது ஒரு வேதனைமிக்க சோகத் தொடர்கதை. மனிதன் பிறக்கும் பொழுது ஆரம்பிக்கும் அத்தியாயம், அவன் கணக்கிட முடியாத கட்டங்களைத்தாண்டி, மூப்பின் கொடுமையாலோ, நோய் வாய்ப்பட்டோ அல்லது தற்கொலை செய்து கொண்டாவது சாகும் பொழுதுதான் அந்தத் தொடர்கதை முடிவடைகிறது. மனிதன் தன் வாழ்நாட்களைப் போராட்டக்களத்திலேயே போக்குகிறான். வாழ்க்கைப் போராட்டக்களத்தில் மனிதன் ஒரு முனையில் தன்னந்தனியாக சளைக்காது போராடும் உள்ளத்தோர் தன்னைத் தாக்கவரும் கொடுமைகளை எதிர்த்து நிற்கிறான். மற்றோர் முனையில் அடக்கு முறையை அள்ளி வீசும் அரசாங்கமும், ஆட்டிப்படைக்க அதிகாரம் பெற்றிருக்கும் மதமும், அதன் பிரதிநிதிகளான மதக்குருமார்களும், ஏமாந்த நேரத்தில் ஏற்றங் கொண்டு இரத்தத்தை உறிஞ்சும் முதலாளித்துவமும் அவனை விட்டு நீங்காது நிழலெனத் தொடரும் எருமையும், அதனால் விளையும் கொடுமைகளும் ஒன்றுகூடி நிற்கின்றன. இவ்வளவையும் எதிர்த்து போராடி ஈடுகொடுத்து விட்டு வாழவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறான் மனிதன். சமுதாயத்தின் அடித்தளத்தில் அகப்பட்டு, நசுக்குண்டு சீரழிந்துகிடக்கும் நூற்றுக்கு தொண்ணூறு பேர்களான நம்போன்றவர்களைத் தான் நான் இங்கு மனிதன் என்று குறிப்பிடுகிறேன்.

மனித வாழ்வின் நீடிப்பிற்கு அவனது ஆசைக் கனவுகளும், எண்ணங்களும்' இலட்சியமும் தான் உயிர்ப்பு. வாழ்க்கை வளம் பெறுவதற்காக வகுத்துக் கொள்ளும் வழிதுறைகளையும், தீட்டிக் கொள்ளும் திட்டங்களையும் நோக்கி மனிதன் முன்னேறுகிறான். இந்த முன்னேற்றப் பாதையில் எதிர் நீச்சில் செல்லும் பொழுது அநேக தடவைகளில் அவன் மூர்ச்சையடைந்துவிடுவதுண்டு. இதுபோன்ற சந்தர்ப்பங்களில் பலர் உள்ளம் ஒடிந்து செயலற்றவர்களாகிவிடுவதும் உண்டு. ஆயினும், மீண்டும் சிந்தனையை வழிகாட்டியாகவும், முயற்சியை ஊன்றுகோலாகவும் கொண்டு முன்னேற பிரயத்தனப்படுகிறார்கள். இப்படி விடாப்பிடியாக முயற்சிக்கும் ஒவ்வொரு தடவையிலேயும் முடிவு தோல்வியாகவே

(தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க)

# தலைவர் பெரியார்!

—(•)—

சூத்திரன் பட்டம் ஒழியவேண்டும் என்ற கொள்கையில், சூத்திரனென்றால் ஆத்திரம் கொண்டடி என்ற அளவுக்கு உணர்ச்சி கொண்டிருக்கிறார்கள் இன்றைய நம் தமிழ்மக்கள். இந்த உணர்ச்சி எப்படி வந்தது? யாரால்?

மனிதனை மனிதன் உயர்ஜாதி கீழ்ஜாதி என்று பிரித்து வைக்கும் கொடுமையில் கொடுமை ஒழிக்கப்படவேண்டும்; உயர்ஜாதி கீழ்ஜாதி என்ற பிரிவின் பேதமையினால் தான் நாம் தாசிமகன் என்று அழைக்கப்பட்டு வருகிறோம், ஒரு சில கூட்டத்தாரால்—என்ற இந்த உள் உணர்வு, உண்மை நிலை நாம் அறிந்தது யாரால்? யாரின் தளரா உழைப்பினால்.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற பொது நோக்கில் சமரசமணம் கமழ வாழ்ந்த நம் நாட்டில் ''பிறப்பில் உயர்வு தாழ்வு'' கொள்கை இடையில் வளர்ந்தது எந்த முறையில்—அது யாரின் வருகையின் பின், இந்த ஆராய்ச்சி செய்து உண்மையைக்காட்டிய வழிகாட்டி யார்?

உழைக்கிறோம் மாடு என; ஆனால் உழைப்பின் பயன் நமக்கில்லை. மாறாக உழைக்காத ஒரு கூட்டம் வாழ்வின் சகல நலங்களையும் பெற்று ஒய்யார வாழ்வு வாழ்வது எப்படி?—என்ற இந்த அடிப்படை காரணத்தைக் காட்டி, அதுதீர வழிகாட்டும் பெருந்தகை யார்?

நாட்டுக்குடையோரை காட்டுமிராண்டியாக்கும் கம்பராமாயணத்தை உயர் இலக்கியமென்கிறாயே தம்பி! அதில் உன்வாழ்வு கேவலமாக்கப்படுகிறதே, அதை இலக்கியமென்றாயே-இது நீதியா; அதை தெய்வமாக்கதை என்கிறாயே—இது சரியா? அதை பக்தியூட்டும் பாமாலை என்கிறாயே—இது உண்மையா? என்று கேட்டு உண்மை நிலையுணர்த்தி; கொளுத்தப்படவேண்டியது கம்பராமாயணம் என்று காரணத்துடன் எடுத்துக்காட்டிய பெரியாரில் பெரியார் யார்?

நம் அருமைத் தலைவர் பெரியார் இராமசாமியல்லவா! இன்று நாம் சுயமரியாதை கொண்டிருக்கிறோம் என்றால் அதற்குக் காரணம் பெரியார் இராமசாமியல்லவா? இன்று நாம் நாட்டுக்குடையோர் என்றுகூறி தனியாட்சி கோருகிறோம் என்றால் அதற்குக் காரணம் நம் அன்புத்தலைவர் பெரியார் அவர்கள் அல்லவா? இன்று அறிஞர் என்ற சொல்லுக்கு உரியரான அண்ணாதுரையின் சுயமரியாதைக்குக்கூட காரணம் நம் தலைவரல்லவா? இருந்தும் இன்று பெருந்தாக் காரணம்கூறிப் புகழ்தேடப் புறப்பட்டதன் காரணம் என்ன? இந்நாடு ஆரியநாடு என்று வீரியமாகக் கூறி, புராண இதிகாசங்களின் ''பெருமையை'' நிலைநாட்டுவான் வேண்டி பாடிச் சென்ற பாரதியாருக்கு நம் அன்புக்குரிய அண்ணா துதிபாடுவது ஏன்? ஏன்? என்றுதான் கேட்கத் தூண்டுகிறது மனது......

அண்ணல் காந்தி கூறுகிறார்: ஒருவருடைய கொள்கை சரியானதென்று பட்டால், அது நாட்டிற்கு நலம்பயக்கும் என்று தெளிந்தால், அப்படிப்பட்ட பெருந்தகைக்கு நாம் செய்ய வேண்டுவது அவரைப் பின்பற்றுவதேதான் என்று. எனவே, நாம் கண்ணொளி பெற்றது நம் தலைவர் பெரியாரின் பெருங்கொள்கையினால்—, என்று உணர்வதினால் நம் கடமை தலைவரைப் பின்பற்றுவதுதான்—போர்வீரன், தளகர்த்தரின் கட்டளைக்குத் தலை வணங்குவதுபோல், அன்றி தலைவர் தவறிவிட்டார் என்று கற்பித்து வேறு தலைவர் தேர்ந்தெடுப்பது ஒன்று அறியாமையாக இருக்கவேண்டும், அல்லது வேண்டுமென்றே செய்யப்படுவதாக இருக்க வேண்டும். காரணம் தலைவரை மாற்றுவது விரும்பத் தக்கதல்ல. அது நாட்டின் நலனுக்கு உகந்ததுமல்ல. 'தலைமைப் பதவி புகையிலையல்ல மாற்றப்பட'' என்கிறார் உலகின் அறிஞர் பெர்னாட்ஷா.

ஒரு சமயம்—ஏன்—இதற்கு முன் எல்லாம் எங்கள் தலைவர் பெரியாரே என்று பல ஆயிரக்கணக்கான மேடைகளில் கூறினர் இன்று எதிர் முகாம் அமைப்போர். ரஷ்யாவுக்கு ஒரு லெனின், பிரான்சுக்கு ஒரு ரூஸோ, அமெரிக்காவுக்கு ஒரு லிங்கன் அதேபோல் தமிழ் நாட்டிற்கு எங்கள் தலைவர் பெரியார் இராமசாமி என்று எக்காளமிட்டனர். இருந்தும் இன்று ஏன் எதிர் முகாம் அமைக்கின்றனர்? சொந்த சுயநலம் தவிர வேறு ஏதாவது காரணம் கற்பிக்க முடியுமா?

இதுகாறும் சுயமரியாதைப் பிரசாரம் செய்தவர் நம் தலைவர்; எதையும் சிந்தித்து முடிவு செய் என்று கூறுபவர் நம் தலைவர்; அவரிடம் பாடம் கேட்டவர்கள் நாம்; அவருடைய பகுத்தறிவில் குற்றம் கண்டு பிடித்ததாக எண்ணினால் அது கேலிக் கூத்தாகவன்றோ முடியும். இதையுணராததேன் நம் தோழர்கள்? இதுவரையில் தலைவர் முடிவே செம்மையுறு முடிவு என்று போற்றி வந்தவர் இன்று தகாத காரணம்கூறி எதிர்ப்பது—அதுவும் தலைவர் அவர்கள் தெளிவான காரணம் காட்டிய பின்னரும்—நமக்கு அவர்களின் உள்ள உணர்ச்சிகளில்தான் சந்தேகம் உண்டாகிறதே தவிர வேறல்ல!

ஒரே எடுத்துக்காட்டு அவர்கள் முடிவு தவறு என்பதற்கு தலைவர் பெரியார் ''ஹிந்து-பகுத்தறிவுவாதி'' என்று போட்டது தவறு என்கிறார்கள். இதே கேள்வியை அண்மையில் குடந்தையில் பெரியார் அவர்களைக் கேட்டார்கள். அதற்குப் பெரியார் புன்முறுவலுடன் அளித்த பதில்-கீழே காணப்படுவதுதான்.

இன்று நாட்டில் தேர்தல் நடக்கிறது. தேர்தலில் நிற்க விரும்புகிறார் நம் இனத்தைச் சேர்ந்தவர் ஒருவர். ஆனால் முஸ்லீம் தொகுதி, கிறிஸ்தவத்தொகுதி, ஹிந்துதொகுதி என்ற இந்த மூன்று தொகுதிகளில் ஏதாவது ஒன்றில்தான் நிற்கமுடியும்—அரசாங்கத்தின் உத்திரவுப்படி. அது முடியாது நான் திராவிடர் தொகுதியில்தான் நிற்பேன் என்றால் என்ன ஆகும்? அதுபோலத்தான் பதிவுத்திருமணம் செய்து கொள்ளும் போது ஹிந்து என்றுதான் போடவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதனால் தான், நான் ஹிந்து என்றுமட்டும் குறிக்காமல் பகுத்தறிவு வாதியென்ற ஒன்றையும் உடன் சேர்த்துக் கொண்டேன்—நம் கொள்கையைக்காட்ட. அது தவறாகுமா? நாம் ஹிந்து மதத்தைப்பற்றி சொல்வதெல்லாம் புராண இதிகாசங்களென்றும் பொய்யான குப்பைகள் நிறைந்திருக்கின்றன அவைகள் ஒழிக்கப்படவேண்டும் என்பது தான். என்னுடைய அந்த கொள்கையைச் சுட்டிக் காட்டத்தான் பகுத்தறிவுவாதி என்று இணைத்துக் கொண்டேன்'' என்று கூறினார்கள். சட்டம் தெரிந்தோர் அனைவரும் பெரியாரின் தெளிவுரை செம்மையானது என்றே கூறுவர்.

எனவே வீண் விதண்டாவாதங்களை கற்பித்து, வீணாக கிடைத்தற்கரிய காலத்தை வீணாக்காமல், தலைவர் பெரியாருடன் இணைந்து அவரிடும் கட்டளைகளை செயலில் காட்டி நாட்டிற்கும், நம்மனோர்க்கும் நல்லதைச் செய்வோம்.

மாறாக புராணத்தைப்பற்றி பேசுபவர் தானே என்று கூறுவது அறிவுடைமையாகாது (என். வி. நடராசன், சூத்திரன் என்று பேசிக்கொண்டிருக்கட்டுமே என்று கூறியிருக்கிறார்) அறிஞர்க்கழகுமாகாது என்று கார்ல் மார்க்ஸ் கூறுகிறார். எனவே பெரியாரே நம்தலைவர். அவரையே பின்பற்றுவோம். அதுவே நம் கடமையுமாகும்.

—''கண்டீரன்—[illegible]ணை.''

உரிமை] [ஆசிரியருக்கே

# தொல்காப்பியப் பொருளதிகார விளக்கம்.

—(புலவர் குழந்தை)—

(சென்றவாரத் தொடர்ச்சி)

பொதுவாக மக்கட் பிறப்பினர் எல்லோருக்கும் கல்வி இன்றியமையாத தொன்றாகையால் ஓதல் யாவர்க்கும் பொதுவாக வேண்டிய தொன்றாம். எளியோர்க்கு ஒன்றை ஈதலும், எடுத்த காரியத்தை முடிக்க முடியாதவர்க்கு உதவுவதும் எல்லோருக்கும் ஒத்த கடமையாகும். எனவே, சொல்லாலும், பொருளாலும், உடலாலும் பிறர்க்குதவுதலும், எளியோர்க் கீதலும், கற்க வேண்டியவற்றைக் கற்றலும் எல்லோர்க்கும் ஒப்பமுடிந்த பொதுத் தொழில்களாகும். அரசர் காவலில் உதவியடங்கும். குற்றஞ் செய்தோரைத் தண்டித்தே மக்களைக் காக்க வேண்டுதலின் ஒறுத்தலும் காவலில் அடங்கும். எனவே,

அரசர் அய்ந்தொழில்:—ஓதல், ஈதல், படைக்கலம் பயிறல், குடிகாத்தல், செங்கோன்மை என்பனவாம் வணிகர் அறுதொழில்:—ஓதல், ஈதல், உதவி, விருந்தோம்பல், நிறைகாத்தல், வாணிகம் என்பனவாம். வேளாளர் அறுதொழில்:—ஓதல், ஈதல், உதவி, விருந்தோம்பல், நிறைகாத்தல், உழவு என்பனவாம். நிறை-ஆடு மாடுகள். ஆடு மாட்டு வாணிகம் செய்வதால் நிறைகாத்தல் வணிகர்க்குரித்தாயிற்று.

அகப்பொருளின் கூற்று கேட்போர் வாயில் என்னும் மூன்றற்கும் உரியராக 15 பேர் கூறப்படுகின்றனர். கூற்று—கூறுவோர். வாயில்—துணை, தூது. அவை,

களவிற்குரிய கூற்று:—பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, தலைவன், தலைவி என அறுவர். பாங்கன்-தலைவனது தோழன். தோழி—தலைவியின் உடலுயிர் போன்றாள். செவிலி—தலைவியின் வளர்ப்புத்தாய். கற்பிற்குரிய கூற்று—பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர், பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, தலைவன், தலைவி எனப் பன்னிருவர். பாணரும், கூத்தரும் இசை நாடகத் தமிழ் வகுப்பினர். விறலி—பாணன் மனைவி. அறிவர்—தமிழ்த் துறவியர். கண்டோர்—வழிப்போக்கர். தலைவன் தலைவியைத் தன்னூர்க்கு அழைத்துச் செல்லும் ‘உடன் போக்கில்’ தலைவன் தலைவிக்கும், தேடிச் சென்ற செவிலிக்கும் வேண்டுவன கூறுவர். ஒருவர் கூறுவதைக் கேட்பவர் கேட்போர் எனப்படுவர். இன்னின்னார் கூறுவதை இன்னின்னார் கேட்பர் என்னும் வரையறையுண்டு. தலைவன் தலைவி பேச்சை எல்லாருங் கேட்பர்.

வாயில்:-தோழி, செவிலி, பார்ப்பான், பாங்கன், பாணன், கூத்தன், பாடினி, விறலி, இளையர், விருந்தினர், அறிவர், கண்டோர் எனப் பன்னிருவர். பாடினி-பாடுபவள். இளையர்—காமப்பருவமுறாதவர். தலைவன் ஏவியதைச் செய்து கொண்டிருப்பவர். விருந்தினர்—புதியவர்.

இவ்வகையில் அகவொழுக்கத்திற்குரிய மக்களை வகுத்தும், தொகுத்தும், பகுத்தும் புனைந்துரைவகையால் செய்யுள் செய்து மக்கள் அகவாழ்வைப் பாதுகாத்து வந்தனர் நம் முன்னையோர். அகவாழ்வின் சிறப்பிற்காகச் செல்வாக்குள்ள தலைவன் தலைவியைக் கற்பித்துக் கொண்டதேயன்றி மற்றவர்க்கெல்லாம் இது விலக்கன்று. எல்லோரும் இன்புற்று உயரிய வாழ்வு வாழவேண்டும் என்னும் பெருநோக்குடன் செய்வதே செய்யுள் வழக்காகும்.

உலக பெருநாட்டு மக்களெல்லாம் நாகரிகம் என்பது இன்னதென்றே அறியாத அக்காலத்தே நம் பழந்தமிழ்ப் பெருமக்கள் வாழ்க்கையை அகவாழ்வு, புறவாழ்வு என இரண்டாக வகுத்து, அவற்றிற்கு முதற் பொருள், கருப்பொருள், உரிப்பொருள் மக்கள் என்னும் உறுப்புக்கள் வகுத்து இவ்வளவு சீரிய முறையில் நனி நாகரிகத்துடன் வாழ்ந்து வந்தனர் என்பதை ஒவ்வொரு தமிழரும் எண்ணியெண்ணி இறும்பூதெய்த வேண்டியதொன்றன்றோ!

பிரிவு.

இனிப் பாலையொழுக்கமாகிய பிரிவு 1. ஓதற்பிரிவு, 2. பகைவயிற்பிரிவு, 3. தூதிற்பிரிவு, 4. காவற்பிரிவு, 5. பொருள்வயிற்பிரிவு என அய்ந்து வகைப்படும் ஓதல், பகை, தூது என்னும் மூன்று பிரிவும் கற்புக்காலத்தும், அதாவது களவொழுக்க மொழுகி மணஞ்செய்து கொண்டு இல்லறம் நடத்தும் போதும், காவல், பொருள் என்னும் இரண்டு பிரிவும் களவுக் காலத்தும் நிகழும். களவுக் காலத்து ஒருவழித்தணத்தல் என்னும் சிறுபிரிவும் நிகழும். அதாவது, இடைவிடாது இன்பம் நுகர்ந்து வரும் தலைவன் அவ்வின்பம் தெவிட்டாமல் இருத்தற்பொருட்டு சிலநாள் தலைவியைப் பிரிந்திருத்தல். மருதவொழுக்கமாகிய ஊடலைச் சிறப்பிக்கும் பரத்தையிற்பிரிவு என்பதும் கற்புக்கு உண்டு. எனவே, களவிற்பிரிவு-காவற்பிரிவு, பொருள்வயிற்பிரிவு, ஒருவழித்தணத்தல் என மூன்று. கற்பிற் பிரிவு-ஓதற்பிரிவு, பகைவயிற்பிரிவு, தூதிற்பிரிவு, பரத்தையிற் பிரிவு என நான்கு. காவற்பிரிவும், பொருட்பிரிவும் கற்புக்காலத்தும் நிகழும்.

அவற்றுள்; 1. ஓதற்பிரிவாவது- அயல் நாடுகளுக்குச் சென்று அந்நாட்டுப் பழக்கவழக்கங்களைக் கற்றுவர மனைவியைப் பிரிந்து செல்லுதல். இளமையிலிருந்து தாய்மொழியிலே வாழ்க்கைக்கு இன்றியமையாத அறநூல் முதலி

(தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க)

# இளைஞன் உள்ளம்.

★

பல நூற்றாண்டுகளாக ஆரியத்தின் சூழ்ச்சியால் அறியாமைக் கடலில் ஆழ்ந்து கிடந்த ஒருபெரும் சமுதாயத்தைப் பகுத்தறிவு பகலவன் எனத் தோன்றித் தனது சிந்தனைத் திறனால் அறிவொளி வீசி அறியாமை போக்கித் தட்டி எழுப்பிய தன்மானத் தந்தை தகுதி மிக்க தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமியை சிந்திக்கும் திறன் படைத்த இளைஞர்கள் பின்பற்றியே தீருவர். நேர்மை பொது நலநோக்கு ஆர்வத்தோடு கூடிய சலியாத உழைப்பு உள்ள ஒரு தலைவரிடம் பிடிவாதம் சர்வாதிகாரம் இருக்க வேண்டியது மிக மிக அவசியம் கட்டுப்பாட்டை உண்டாக்குவதற்கு. கட்டுப்பாடற்ற ஒரு இயக்கம் சீர்குலைந்து விடும். நமது இயக்கம் ஓரளவு கட்டுப்பாடுள்ள மக்களைக் கொண்டிருந்ததாலேயே யார் வந்தாலும் போனாலும் யாதொரு கேடுமின்றி இவ்வளவு பெரிய இயக்கமாக எதிரிகளும் ஆட்சியாளரும் வியக்கும் வண்ணம் பரிணமிக்க முடிந்தது. சுமார் இரண்டு மூன்று மாத காலமாகப் பெரியாரின் வாரிசு திருமண ஏற்பாட்டிற்கு முன்னும் பின்னும் நம் கழகத்தில் சேர்ந்ததற்குப் பிறகு பேரும் செல்வாக்கும் அதனால் பொருளும் எய்தியவர்கள் கழக மாநாடுகளுக்கும் பொது கூட்டங்களுக்கும் மக்கள் நம்மைப்பற்றிக் கொள்கைகளைப்பற்றி அறிந்துபோக (அவர்கள் நம்மைப் பின்பற்றுகிறார்களோ இல்லையோ அது வேறு செய்தி) திரள் திரளாக கூடுவதைக்கண்டு தப்புக் கணக்குப் போட்டுக்கொண்டு (கூடுகிற மக்களில் எல்லோருமே நம்மை ஆதரிக்காவிட்டாலும் கூட்டத்திற்குக் கூட்டம் நம்மை ஆதரிக்கிற மக்கள் ஒரு சிலர் அதிகமாகிக்கொண்டே வருகிறார்கள்என்பதுஉண்மைதான். அந்தஅளவு போதாது என்பதும் உண்மைதான்) அரசியல் பதவி லாப துறைகளை அடைய நினைப்பவர்கள் தமது சீட்டாடியகைகளால் தேர்தல் போட்டி எனும் அரசியல் சூதாட்ட சகடைகளை எடுத்து விளையாட நினைக்கிறார்கள். அத்தகையவர்களே இன்று பெரியாரின் இந்த மாசற்ற வாரிசு ஏற்பாட்டை மாசுள்ளதாக மக்கள்முன் தங்கள் முழு சக்தியையும் ஈடுசெய்து எழுத்தோவியங்கள் தீட்டி எதிர்த்து ஆர்ப்பரிக்கிறார்கள். இதற்குக் காரணம் மக்கள் இன்றுள்ள நிலையில் மக்கள் எந்த அளவு நம்மை ஆதரிக்கிறார்கள் என்ற நிலையில் நமக்குத் தேர்தல் போட்டி போன்ற அரசியல் போராட்ட முனைகள் தேவையில்லை. அதனால் ஒன்றும் செய்துவிட முடியாது என்பதைப் பெரிதும் பெரியாரவர்கள் உணர்ந்து அத்தகைய திட்டங்களுக்கு ஆக்கம் தாராமல் இருப்பதாரும். சுயலாபம் கருதிப் பொதுத் தொண்டு செய்வது போல் பாசாங்கு செய்து பொதுவாழ்வில் இறங்குகிறவர்கள் மக்களுக்கு உருப்படியான நலன் எதும் சாதித்துவிட முடியாது. அவர்கள் போக்கும் இப்படித்தான் இருக்கும். பெரிதும் பெரியாரின் கொள்கைகளால் தம் கருத்தை வளர்த்துக் கொண்டு புத்தகமாகவும் சினிமா கதையாகவும் சித்தரித்து எழுதி லாபம் பெற்ற கொள்கை தாகர் போட்டு விட்டார் எதிர் போர்த்தளம். மாலையில் மணி அடித்து கோயிலெனும் மக்களின் அறிவைக் கொள்ளையடிக்கும் இடத்திற்குக் கூப்பிட்டு அறியாமையை வளர்த்து அதனால் கிடைக்கும் லாபத்தை அனுபவிக்கும் சுயநல மதவாதிகளைப்போல், மாலை மணியை அசைத்து எழுத்தோசை கிளப்பி அழைக்கிறார் நமது மாஜி தளபதி தளத்திற்கு. சரித்திரகால அரசர்களைக் கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்றி அட்டகாசம் செய்த தளபதிகளின் சரிதைகளைப் படித்த நாம் இதில் ஏமாந்து விடக்கூடாது. அறிவற்றமக்களை அறிவுள்ளவர்களும் அறிவுள்ள மக்களை அறிவற்றவர்களும் ஆள்வது கடினம். இந்த விதமான அரசியல்தான் இன்றுள்ளது. இத்தகைய அரசியலில் அதிகாரங்களைக் கைப்பற்ற நினைப்பவர்கள் கட்டாயம் பித்தலாட்டம் செய்துதான் தீரவேண்டும். அரசியல் பித்தலாட்டம் என்பது மக்களிடம் ஓட் கேட்கும்போது கொடுக்கும் நன்மை செய்வேன் என்ற வாக்குறுதியை,பதவியை அடைந்தபிறகு வாக்குறுதிக்கு நேர்மாறானதைசெய்தலாகும். ஆகவே மக்களுக்குநலன் விளைவிக்கக் கூடிய பகுத்தறிவுக் கொள்கையைச்சார்ந்த சட்டங்களைச்செய்யவும், அதை ஆதரிக்கவும் பகுத்தறிவு பெற்ற மக்கள் பெருக வேண்டும். அதற்கான பிரசாரம் கால வரையரையின்றி நடந்து கொண்டேயிருக்க வேண்டும். கால வேகத்தில் பகுத்தறிவுக் கொள்கைகள் . தன் பக்கம மக்களை இழுத்து அதிகப்படுத்திக் கொண்டேதானிருக்கும். சுவையுள்ள கனிகள் காய்க்கும் பகுத்தறிவு என்ற கன்றைநட்டு தொண்டு என்னும் வாளியைக் கொண்டு, பிரசாரம் என்னும் நீர் ஊற்றி வளர்ப்போம், கன்று வளர்ந்து, செடியாகி, மரமாகி, பூத்து காய்த்து பழுத்துக் குலுங்கும்பொழுது அம்மரத்தை வேம்பு என்று நினைத்திருந்த மக்கள் பகுத்தறிவாளர்களான உடன் அதன் சுவையறிய திரள் திரளாக மரத்தைச் சூழ்ந்து கொள்வார்கள். அப்பொழுது கொடுப்பர் அறிவுள்ளவர்களிடம் அரசியல் ஏணியை. ஏறியவர்கள் பறித்துப் போடுவார்கள் பழங்களை. (சட்டங்களை) ஏற்று புசித்து (நலனடைந்து) மகிழ்வார்கள். அந்த நாளில் நாம்இருப்போமா என்ற ஏக்கம் வேண்டாம். இருக்கவேண்டிய அவசியமுமல்ல. நமது கொள்கை வெற்றி அடையும் என்ற நம்பிக்கையால். நமது கல்லறைகளின் மீது எழட்டும் வெற்றிச்சின்னம். நன்றியுள்ள மக்கள் நம்மை நினைப்பார்கள் அதுபோதும். பெரியாரின் பெருந்தன்மையான நோக்கம் இதுதான். கன்று மரமாவதற்குள் மக்களை அழைக்கவேண்டாம் கனிகள் தருகிறேனென்று. அருகே வந்த மக்கள் அருவருப்பு கொள்வர் அடைந்த ஏமாற்றத்தால். அரசியல் சூதாட்டக்காரர்கள் பட்டியலில் நம்மையும் சேர்த்து விடுவார்கள். ஆகையால் நமது பிரசார இயக்கம் தொடர்ந்து நாட்டில் பகுத்தறிவுப் பிரசாரம் செய்யட்டும். ஆதரவு பெருகும் என்ற நம்பிக்கை நமக்கிருப்பதால் ஆவன செய்வோம். அறிவுத் தந்தை பெரியார் வகுக்கும் வழி நடப்போம். உண்மையின் வெற்றி பருதி ஒளி போன்றது. பொய்யின் வெற்றி மின்னல் ஒளி போன்றது. சுயநலமிகளின் தப்புப் பிரசாரம் எனும் இருள் சூழ்ந்ததால் என்ன மூழ்கிவிட்டது. காலைக் காலை வீசும் உண்மை எனும் பருதியின் ஒளி.

வாழ்க பெரியார் தொண்டு!
வெல்க அவர் குறிகோள்!!

—பே. நடராசன்

---

உண்டு, உடுத்தி, குடித்து, களித்து சில ஆண்டுகள் உயிர்வாழ்வதைவிட தாய் நாட்டிற்காக இன்றே இறப்பது சிறந்தது.

—நெப்போலியன்.

எந்தப் பாவத்தைத் தடுக்க வேண்டியது அவசியமோ, அந்தப் பாவத்துடன் ஒத்துழைக்க மறுப்பதுதான் ஒத்துழையாமை.

—ஸ்டோஸ்க்;

கெட்ட சட்டங்கள் செய்யப்படுவதைத் தடுத்து நல்ல சட்டங்கள் செய்வதற்குத்தான் சட்டசபை வேண்டும்.

—காந்தியார்.

# இன்னும் மதம் வேண்டுமா?

★

நமக்கு இன்னும் மதம் தேவையா? என்ற இந்தப் பிரச்னையை ஆராயவேண்டிய சமயம் மிகவும் நெருங்கி விட்டதெனக் கூறல் மிகையாகாது. இன்று நமது நாட்டில் குடிகொண்டு வரும் பலவகைப் பட்ட சீர்திருத்தங்களுள், தீண்டாமை என்னும் ஒருவித உணர்ச்சியானது அதிகரிக்கப்பட்டிருக்கும் இக்காலையில் உண்மையை உணருதல் மிக மிக அவசியமாகும். ஒரு மரமானது, தன்னிடத்தில் எத்தனையோ அழகிய வர்ணங்களையுடைய பழங்களைக் காய்ப்பினும், அப்பழங்கள் மனிதனையே விளைவிப்பதென்றால் அப் பழங்களைக் காய்க்கச் செய்யும் மரத்தை அடியோடு வேரறுத்து விட்டு, குழிதோண்டிப் புதைப்பதுடன் வேறு பயனுள்ள வேறு ஒரு செடியையும் நடுதல் அவசியமாகும். இதுவே அறிவுடைய செய்கையுமாகும். இதைப் போன்றே இன்று 'இந்து மதம்' என்னும் பெருத்த மரத்தின் கிளைகளில் 'தீண்டாமை' என்னும் கனிகள் காய்த்துக் கிடக்கின்றன. இப் பழங்களுள் நிறைந்திருக்கும் சுளைகளெல்லாம் முழுதும் விஷத்தன்மையுடையதாகும். இச்சமயத்தில் இந்தத் தீண்டாமை என்கிற கனிகளை நாம் பறித்து விடுவதா? அல்லது அக்கனிகளைக் காய்க்கச் செய்யும் 'இந்து மதம்' என்னும் பெரும்மரத்தை வேரறுத்துக்குழி தோண்டிப் புதைப்பதா? என்ற ஐயப்பாடு உண்டாகிறது. இதற்கு நாம் முன் காட்டின உதாரணத்தைப் போல் செய்தல் சமயோசிதமும்—உசிதமுமாகும். இந்த வகையில் தான் இன்று நமது மதங்களும், அதன் தத்துவங்களும், மற்றும் ஏனைய பழக்க வழக்கங்களும் காணக் கிடக்கின்றன. இச்சந்தர்ப்பத்தில் நமது பெரியார் ஈ. வெ. ரா. நிகழ்த்தின சொற்பொழிவுகளில் ஒன்றில் குறிப்பிட்டுள்ள ஒரு சிறு அறிவுடைமை உதாரணம் நமது ஞாபகத்திற்கு வருகின்றது. ஒரு கிணறு நிறைய வெள்ளமிருக்கின்றது. ஆனால் அது மனிதர்கட்குக் குடிப்பதற்குப் பிரயோஜனப்படுவதில்லை. அந்தக் கிணற்றிலுள்ள வெள்ளத்தை வெளிப்படுத்தி அதைப் புதுப்பிக்க வேண்டிய முயற்சிகள் எடுத்தோம். இன்னும் சுத்தப்படவில்லை. இன்னும் அதே கிணற்றில் ஜலக்கிருமிகளைக் கொல்லவல்ல ஜல ஒளடதங்களை ஊற்றினோம். தண்ணீர் சுத்தமடைந்தபாடில்லை. இந்தப் பாழுங் கிணற்றை வைத்துக் கொண்டு நாம் எத்தனை நாட்களுக்குத்தான் குடிக்க சுத்த ஜலமின்றித் தவிப்பது?

இத்தறுவாயில் இப்பாழுங் கிணற்றை மூடிவிட்டு வேறு மண்ணின் தன்மையை நன்குணர்ந்து மனிதனுக்குப் பயனளிக்கக்கூடிய வேறு ஒரு கிணற்றைத் தோண்டி அத்தண்ணீரை உபயோகப்படுத்திக்கொள்ளல் அறிவுடைமையாகும். இதைப் போன்றே 'மதங்கள்' என்ற பாழுங்கிணறுகள் மனித சமூகத்தைக் கெடுக்கத் தோன்றிப் பல நாட்களாயின. இப்பாழுங்கிணற்றிலுள்ள தண்ணீர் மனித வருக்கத்திற்குக் குடிக்கப் பயன்படுவதில்லை. இதைச் சீர்திருத்த கபிலர், புத்தர், வள்ளுவர், ஒளவையார் போன்ற பல மூதாதை அறிஞர்கள் உழைத்தனர். தங்களது வாய் மருந்தையும் வீசிப்பார்த்தனர். என்ன பயன்? ஒன்றுமில்லை. கெட்ட தண்ணீர் அப்படியே 'மதம்' என்னும் பாழுங்கிணற்றில் தயங்கி நின்று கொண்டு அதை உட்கொள்ளுவோருக்கு மயக்கத்தைக் கொடுத்துக் கொண்டே வருகின்றது. இதனாலேயே 'மதம் மனிதனுக்கு அபின்' போன்றது என அறிஞர்கள் கூறுகின்றனர். இது உண்மை என்பதை நாம் இன்று பிரத்யட்சமாகக் கண்டு வருகிறோம்.

மதக் கற்பனைகள்.

இன்று உலகில் நடைமுறையில் அனுசரிக்கப்பட்டு வரும் ஒவ்வொரு மதத்தைக் குறித்தும், ஒவ்வொரு விதமான கற்பனைக்கதைகள் கட்டிவிடப்பட்டிருக்கின்றன. இக்கற்பனைக்கதைகள் சில போராசிரியர்கள் நாவல் மூலமாக எழுதுவதைப் போன்றே எழுதப்பட்டிருக்கின்றன. இக்கற்பனை ஆசிரியர்களே இம்மதங்களுக்குத் தலைவர்களுமாவார்கள். இத்தலைவர்கள் கூறியிருப்பது ஒன்று. ஆனால் அதை அனுசரித்து வருவது பலவுமாகும். இன்று உலகத்தில் வழங்கும்படியான மதங்களைக் குறித்தும், மதம் என்றால் என்ன என்பதைக் குறித்தும் நாம் கேட்கும்போது இம்மதத் தலைவர்களும், குருக்களுமென்பார்கள். மதம் என்றால் இன்னது என்று கூறி விளக்க முடியாது. மதம் என்பதற்கு ஒரே ஒரு பொருள் கூறவும் இயலாது. ஆனால் நம்மவருள் மதத்தைப்பற்றிப் பேசும் போது அனைவரும் உணர்ந்து கொள்ளுவர் என்கிறார்கள். அப்படி ஏதாவதொரு பொருளைக் குறிப்பிட்ட போதிலும் அதற்குப் போதிய சான்றுகள் கிடைப்பது மிக அரிதாகும். நமது நாட்டில் மதத்தலைவர்கள் மதமே அன்பு, மதமே சிவம், மதமே கடவுள் எனப்பலவாறு பலவகையில் புகழ்கின்றனர்.

இன்னும் மேல்நாட்டு மதப் பெரியோர்கள் கூறுவதைக் கவனிப்பினும் இவ்வாறாகத்தான் இருக்கிறது. அவைகளுள் சிலவற்றைக் கவனிப்போம். E. W. ஹோப் கின்ஸ்' என்பவர் கூறுவதாவது:—

"மதம் மனித வாழ்க்கையை உயரிய வாழ்க்கையுடன் சேர்க்கிறது. எல்லா மதத்திற்கும் சாதாரணமாகக் காணப்படுவது உயரிய ஒரு பொருளிடத்தில் நம்பிக்கை கொள்வதும், இந்த உயரிய பொருளுக்காக இவனது வாழ்க்கைச் செய்கைகளை மாறுபடுத்திக் கொள்வதும், அந்த மாறுபாடுகளினால் இந்த மனிதன் உயரிய பொருளின் உதவியைக் கொண்டு இன்புற்று வாழ்வதுமாகும்" என்கிறார். சி. சி. ஜோஷி என்பவர் கூறுவதாவது.

"மதம் என்பது சில சட்டதிட்டங்களைக் கொண்டது. அவைகள் மனிதனால் ஒழுகப்பட வேண்டியவைகளாகும். அவைகள் நீதித் தத்துவங்களையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. அவைகளை அனுசரிப்பதினால் மனிதனுக்கும் தயை, தாட்சண்யம், அன்பு முதலியவைகள் ஏற்படுகின்றன" என்கிறார். இது எவ்வளவு தூரம் உண்மை என்பதை நம்

வாசகர்கள் பின்வரையப்படும்மதக் கொடுமைகளினால் தெரிந்து கொள்ளலாம். "மதமானது ஒரு தனிப்பட்ட மனிதனதோ, அல்லது சமூகத்தினதோ உணர்ச்சியை நாம் நம்பிக் கொண்டிருக்கும் ஒரே ஒரு பரம்பொருளினிடத்தில் சேர்ப்பதாகும்" என்கிறார் ஜே. பி. பிராட் என்னும் அறிஞர். இன்னும் மதத்தைப்பற்றின நன்மைகளைக் குறித்து குறிப்பிட்டுள்ளதாவது: (1) மதம் மனிதனுக்கு உயரிய பொருளின் உதவியையளிக்கின்றது. (2) மதம் மக்களைத் தங்களது துன்பத்தினின்றும் காப்பாற்றுகின்றது. (3) மதம் இன்னும் உலகில் மனிதன் செய்யும் தீமைகளை வெளிப்படுத்துகிறது. (4) மதம் மாறுவேடமாக மனிதனுக்குழைப்புயர்வற்ற'மோட்ச'த்தை அளிக்கின்றது. (5) மதம் மனித வாழ்க்கையை விடுத்து உயரிய வாழ்க்கையைத் தேடுகின்றது. (6) மதம் தனிப்பட்ட ஒரு மனிதனது உள்ளத்தில் ஆணிவேர்போல் பதிந்து அவனது வாழ்க்கைக்குரியவைகளை அளிக்கின்றது. (7) அது அன்பு, அடக்கம், ஒழுக்கம் முதலியவைகளை மனித வாழ்க்கையில் கற்பிக்கின்றது என்று பலவாறாகக் கற்பிக்கின்றது.

இன்னும் நமக்கு எல்லோருக்கும் எல்லாராலும் மதிக்கப்படுகிற டால்ஸ்டாய் மதமும் ஒழுக்கமும் என்னும் நூலில் கூறுவதையும் கவனிப்போம். அவர் கூறுவதாவது "மத வேர்களின்றேல் உண்மையான ஒழுக்கம் நிலவாது. எப்படியெனின் வேரின்றேல் செடியில்லை" என்பதுபோல் என்கிறார். இவைகளெல்லாம் ஒரு சில பிரமுகர்களின் மதத்தைப் பற்றின தத்துவங்களாகும். இது நிற்க, ஏராளக்கணக்கில் மதத்தலைவர்களென்று கூறிக்கொள்பவர்களின் தத்துவங்களை இங்கு எடுத்தெழுதுவதென்றால் பத்திரிகை இடம் தராது. தவிரவும் இம்மதத் தலைவர்கள் எல்லோருக்கும் ஒரே ஒரு அடிப்படையான முடிவு என்னவெனின், மனிதன் இன்புற்று வாழ்வதற்குரிய வழிகளைக் காட்டுவதே 'மதம்' என்பதாகும்." இதில் எம்மதத்தினருக்கும் அதிகமான ஆட்சேபணையில்லை. இந்த 'இன்பம்' இந்த வாழ்க்கையிலா? அல்லது இவர்கள் நம்பும்படியான விண்ணுலக வாழ்க்கை என்பதிலா? என்பதுதான் தெரியவில்லை. மதக் கற்பனைகளைப் பற்றி இனி அதிகமாகக் கூறவேண்டுவதில்லையெனக் கருதுகின்றேன்.

### மதத்தின் தற்காலீக நிலைமை.

மதமென்றால் என்ன? என்பதைச் சரிவர அதன் பொருளை அறிஞர்களால் உரைக்க முடியாத இம்மதத்தின் தற்காலீக நிலைமை என்ன? என்பதையும் நாம் சற்று ஆராய்வோம். இன்று ஒரு மனிதக் குழந்தை பிறந்த நாட்களிலிருந்து இறந்து சுடுகாடு என்னும் மயானம் சேரும் வரையில் மதத்தின் பல வகைப்பட்ட அலங்கோலங்களுக்கு ஆளாகின்றான். இது ஒவ்வொரு மதத்தினர்களும் தங்களுக்கு ஏற்றவாறு ஒவ்வொரு சடங்குகளாகச் செய்து வருகின்றனர். உதாரணமாக இன்று இந்தக் குடும்பங்களை நாம் உற்றுக் கவனிப்பின் ஒரு இளங்குழந்தை பிறந்தவுடன் அதற்குச் சில நாட்களுக்குள் சுத்தி செய்தல் அல்லது "தீட்டு" கழித்தல் என்னும் ஒருவகைச் சடங்கைச் செய்கின்றனர். இவர்களுள் எந்தவிதமான தீட்டு ஏற்பட்டு விட்டதோ நமக்குத் தெரியவில்லை. ஆனால் அந்தோ! தீட்டு என்பதற்கு முற்றிலும் முரண்பாடாகத் தாய், குழந்தை படுக்கும் அறைகள் ஜன்னல் வசதியின்றி இருள் மயமாக இருந்து சுத்தமின்றி—சுகாதார முறையற்றனவைகளாய் இருப்பதை இவர்கள் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லை.

இன்னும் இக்குழந்தைக்கு சிறிது பருவமடைந்த பின் கலாசாலைக்கு அனுப்பல் என்னும் ஒரு சடங்கைச் செய்து ஏராளமான வீண் செலவைச் செய்கின்றனர். உபாத்தியாயர் என்பவர் குழந்தைகளுக்குத் தெரியாத ஏதேதோ பாஷைகளில் மந்திரிப்பதும், பையன் உளறுவதுமாகக் காலங்கழிப்பான். கல்விக் கடவுளெனப் புகலும் பெண் தெய்வமாகிய 'சரஸ்வதியை' கும்பிடாமல் எந்தப் பையனும் கல்வியை நம்நாட்டில் கற்பதில்லை. ஆனால் 'சரஸ்வதி' இன்னது எனத் தெரியாத அயல் நாட்டார்கள் எப்படிக் கல்விகற்கின்றனர் என்பதை நமது பண்டிதர்களைக் கேட்பின் பதிலுரைக்கத்தெரியாதவர்களாக விழிப்பார். இப்படி ஒவ்வொரு செய்கையிலும் மணம், மரணம், பண்டிகை, நோன்பு எனப் பலவாறாக ஒரு மனிதன் வீண் விரயம் செய்யும் பொருள்களுக்கு அளவேயில்லை. மனித ஒழுக்கத்துக்கும், முக்தியை அடையச் செய்யவும் தோற்றுவிக்கப்பட்ட ஒவ்வொரு மதமும் இன்று உற்றுக்கவனிப்பின் வயிற்றுப்பிழைப்பிற்காகவே பெரும்பாலும் அதிகரித்திருக்கின்றன என்பதில் ஐயமில்லை. சாதாரண இருட்டறையில் பூட்டிவைத்திருக்கும் 'முனியன்' முதற்கொண்டு பெரிய மின்சாரவிளக்கு எரியும் அறையில் பூட்டிவைத்திருக்கும் 'சிவன்' வரையில் தம்மை வணங்குவதற்கு ஆட்களும் பூஜை செய்வதற்குப் புரோகிதனும் வேண்டுமென்றால் இவற்றின் கூற்றை என்னென்று உரைப்பது? பெண்கள் உரிமை, விதவைகள் நிலைமை முதலியவைகளுக்குப் பயன்படுத்தக்கூடிய முறையில் மதம் ஏற்படுத்தப்படவில்லை. மனித உரிமைகளைப் புறக்கணித்து மிருகத்தன்மையையே மதம் தமது அடிப்படையான தன்மையாகக் கொண்டிருக்கின்றது. பெண்ணென்றால் புருஷனுக்கு அடிமை என்பதாகவே மதம் கற்பிக்கின்றது. விதவை என்றால் வேலைக்காரி என்பதாகவே மதம் கூறுகின்றது. இப்படி அலங்கோலப்படுத்தி மனிதனுள் நிலவியுள்ள சுதந்தர உணர்ச்சியை வேரறுத்து, அடிமைமனப்பான்மையைப் புகட்டும் ஒரு அளவற்ற சக்தி மதத்திற்கு எக்காலத்திலுமுண்டு. இன்று மனிதன் செய்யும்படியான எந்த அநீதிக்கும் மதத்தினின்றும்சான்றுகள்காட்டக்கூடியவைகளாவே அவைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்றைய பகுத்தறிவற்ற மக்களிடையில் மதம் பெருத்ததோர் மயக்கப் பொருளாகவே குடி கொண்டு அவர்களை மயக்கி வருகின்றது.

### மத அலங்கோலம்.

நண்பர்களே! மதத்தின் நன்மை தீமைகளை நாம் ஆராயவேண்டிய சமயம் நெருங்கிக் கொண்டிருக்கும் இக்காலையில் உணர்ச்சியும்—உணர்வுமுள்ள இளைஞர்கள் இன்னும் இம்மயக்கத்தினின்றும் புத்துயிர் பெற்று உலாவுதல் அவசியமன்றோ? இன்று நமது நாட்...

(தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க)

# எழுத்திலும் ஜாதிமுறை! பாட்டிலும் ஜாதிமுறை!

வித்துவான் பிரிலிமினரி பரீட்சைக்குப் பாடமாகவுள்ளது "சிதம்பரப் பாட்டியல்" என்பது. வித்துவான் பைனல் பரீக்ஷைக்கு "வெண்பாப்பாட்டியல்" என்பது பாடமாக உள்ளது. இவற்றுள் ஒன்றை எடுத்து ஆராய்ந்தாற்போதுமல்லவா? "வெண்பாப்பாட்டியல்" சாதாரண மக்களும் படித்து அறிந்து கொள்ளத்தக்க விதமாக உரையோடு தெளிவாக இருப்பதால் அதைப்பற்றியே இங்கு கூறுவேன்.

இவ் 'வெண்பாப் பாட்டியல்' (1) முதல்மொழி இயல் (2) செய்யுளியல் (3) பொதுவியல் என மூன்று பகுதிகளைக்கொண்டது. முதல் பகுதியில் பத்தவகைப் பொருத்தங்கள் கூறப்பட்டுள்ளன. ஒருவன் ஒருவனைப்பாட விரும்பினால் இன்ன எழுத்துக்களை முதலில் அமைத்து இன்ன பொருத்தங்களைக் கவனித்துப்பாடவேண்டும் என்னும் விவரத்தைக்கூறுவது இவ்வியல். அதில் "வருணப் பொருத்தம்" என்பதொன்று— அது பின் வருமாறு:—

ஒழியா உயிரனைத்தும்
[ஒற்றுமுதல் ஆறும்
அழியா மறையோர்க்காம்
[என்பர்—மொழியும்
அடைவே ஒராறும்
[அரசர்க்காம் என்பர்
படையாத சாதிகளின் பண்பு.

இதன் பொருள்: உயிர் பன்னிரண்டும் மெய் முதல் ஆறும் (க், ங், ச், ஞ், ட், ண், என்ற ஆறும்) பார்ப்பனர்க்குரிய எழுத்துக்கள்; த், ந், ப், ம், ய், ர்-இவை ஆறும் அரசர்க்கு உரிய எழுத்துக்கள்.

அடுத்த வெண்பா-
பண்பார் வணிகர்க்காம்
[பாங்கில் 'லவறன'க்கள்.
மண்பரவும் சூத்திரர்க்காம்
[மற்றையவை—கண்பால்
அரன் அரி சேய் மால் கதிர்கூற்
றாய் மழைபொன் மெய்க்குப்
பிரமன் படைப்புயிர்க்குப் பேசு,

இதன் பொருள்: ல், வ், ற், ன், இந் நான்கு மெய்யும் வணிகர் வருணம்; ழ், ள்,-இவ்விரண்டும் சூத்திரர்க்கு உரியவை.

இவ்வெழுத்துக்களைப் படைத்தோர்:

பன்னிரண்டு உயிர் எழுத்துக்களைப் பிரமன் படைத்தான்; அரன், அரி, செய்வாய், புதன், இரவி, மதி, யமன், வருணன், வியாழன்—இவ்வொன்பது புத்தேளிரும் (தேவர்களும்) படைத்தனர்.

தமிழ்ச் தோழர்களே! பாட்டியல் நூல் எப்படி இருக்கின்றது பார்த்தீர்களா! இந்த முப்பது எழுத்துக்களில் பார்ப்பனர்க்கு 18; அரசர்க்கு 6; வணிகர்க்கு 4; சூத்திரர்க்கு 2. இந்நாட்டுக்கு உண்மை சுயஆட்சி வந்தாலும் இந்த வீதாச்சாரப்படிதான் உத்தியோகம் கிடைக்குமோ, என்னவோ! இந்தப்பாழும் பாட்டியல் நூலைத் தமிழ்ப் பெருமக்கள் எவ்வாறு சுயமரியாதையை இழந்து—மனச் சாட்சியை இழந்து — மானங்கெட்டுப் படித்து வந்தார்கள்? இவர்கள் ஏன் இந்நூலை இதுகாறும் கிழித்தெறியவில்லை?

இனி, ஒழிபியலில், முதல் வெண்பா நான்கு பாக்களின் சாதி, இடம், நிறம் இவற்றைக் கூறுவது:

வேறு மறையோராதி
(நற்சாதி வெள்ளை முதல்
கூறுநிலை முல்லை குறிஞ்சியே—
மாறா
மருதநிலம் நெய்தல் நிறம்
(வான்மையே செம்மை
கருதரியபொன்மையே கார்.

இதன் பொருள்.

1. வெண்பா—மறையோர் சாதி; நிலம்—முல்லை; நிறம்—வெண்மை
2. ஆசிரியப்பா—அரசர் சாதி; நிலம்—குறிஞ்சி; நிறம்—செம்மை.
3. கலிப்பா—வாணிகர் சாதி; நிலம்—மருதம்; நிறம்-பொன்மை.
4. வஞ்சிப்பா-சூத்திரர் சாதி; நிலம்—நெய்தல்; நிறம்—கருமை.

ஆகவே, பாட்டுகளுக்கும் ஜாதி பிரித்தாய் விட்டது. தமிழராகிய நாம் வஞ்சிப்பாவுக்கு உரியவர்கள், அஃதாவது நாம் தாழ்ந்தவர்கள்; நம்மைப்போல வஞ்சிப்பாவும் தாழ்ந்தது; இதைவிடக் கேவலம் தமிழர்க்கு வேண்டுமா?

அதே பொதுவியலில் நாற்குலத்தவர் இயல்பு பின்வருவாறு காணப்படுகிறது.

பார்திகழும் மூவர் பணித்த பணி
(ஒழுகல்
ஏர் உழுதல், ஈதல், பிழையாமை—
(பார்புகழ
கோட்டம் இலாமை, ஒருமைக்
(குணம் பிறவும்
காட்டினார் சூத்திரர் தம் கண்.

பார்ப்பனர், க்ஷத்திரியர் வைசியர் இம்மூவரும் இட்ட வேலையைச் செய்து ஒழுகுதலும்... (பார்ப்பனர் கொழுத்து நம்மை அடிமைப்படுத்திச் சூத்திரர் என்று சொல்ல) ஈதலும்...பிறவும் சூத்திரர் இயல்பாம்.

இந்த ஆபாசம் நிறைந்த-எழுத்துக்களிலும், பாக்களிலும் ஜாதிகளைப்பிரித்துக் கூறுவதும்-அவற்றைப் பிரித்துக் கூறுவதுபோல நம்முடைய பொய்யான ஜாதிப்பாகுபாடுகளை நிலைநாட்டுவதும் ஆகிய இந்த அயோக்கியத்தனம் நிறைந்த பாட்டியல் நூலை எந்தத் தமிழனாவது படிக்க இயலுமா? இதைப் பாட புத்தகமாகத்தான் வைக்க இயலுமா? சுயமரியாதை வீரபுருஷர் ஒருவர் வித்துவான் போர்டில் இருந்தால்—சுயரத்தம் ஓடும் தமிழர் அந்தப் போர்டில் இருந்தால்—அந்நூலை உடனே பரீட்சைக்குரிய பாட புத்தக வரிசையினின்றும் நீக்கி விடவல்லவாவேண்டும்? தமிழர் கூட்டங் கூடி இப்பாழும் ஆபாச நூலையும் இதுபோன்ற இன்னும் ஏதேனும் இருக்குமாயின் அதனையும்இனிமூாணவர் உலகுக்கே தலைகாட்டவிடாதபடியல்லவா செய்துவிடவேண்டும். பாட்டியல் நூல் படிக்காவிட்டால் குடி முழுகப்போவதில்லை. யாப்பிலக்கணம் ஒன்று போதும். படிக்கும் பார்ப்பனர் அல்லாத மக்கள் மனதைப் புண்படுத்தும் அயோக்கியத்தனமான இப் புத்தகத்தை நாட்டிலிருந்தே உடனே நீக்கி விடுமாறு கிளர்ச்சி செய்தல் வேண்டும்.

யாப்பிலக்கணப் புத்துரையில் (பக் 123.) "மருட்பா"வின் இலக்கணம் கூறியவிடத்து "இது வெண்

(தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க)

# குடி அரசு

24—9—49 சனிக்கிழமை.


## சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்!

சீச்சீ இந்தப் பழம் புளிக்கும் என்று முடிவு கட்டியதாம் ஒரு குள்ள நரி. இப்படி முடிவு கட்டிய நரியினுடைய கதையை வாசகர்கள் அறிவார்கள்.

தேம்துரமான திராட்சைக் கனிகள்!

சிந்தியவற்றிலிருந்து தின்று பார்த்துத் தெரிந்து கொண்டிருந்த உண்மைதான் அது.

ஆனால் இப்போது எட்டாத உயரத்தில் அல்லவா இருக்கிறது? எத்தனைமுறைதான் மூர்ச்சையை அடக்கிக் கொண்டு எழும்பி எழும்பிக் குதிப்பது? கண் விழி பிதுங்க, கால்கள் தள்ளாட என்கிற நிலைமை எவ்வளவு நேரத்திற்குத்தான் நீடிக்க முடியும்?

அது புத்திசாலியான நரி! எத்தனை பாடுபட்டாலும் தன் முயற்சியால் அது தனக்குக் கிடைக்க மாட்டாது என்பது திட்டவட்டமாகத் தெரிந்துவிட்டது! இருந்தாலும் மனது கேட்கிறதா? செயலுக்குக் காரணமாய் நிற்கும் உடம்பு ஒத்துழைக்காதபோது, எண்ணத்துக்குக் காரணமாய் நிற்கும் மனது ஆசைப்பட்டு என்ன பயன்? ஆகவேதான், புத்திசாலியான அந்த நரி ஆசையை அகற்றக் கண்டு பிடித்ததாம் இந்த முடிவை.

இதை திராட்சை என்று நினைத்தால்தானே இனிப்பும்—அதனை நுகர முடியாத தவிப்பும். புளி... படுபுளி...என்று நினைத்தால்...... நினைக்க முடியாதுதான்...இருந்தாலும் நினைத்துத்தானே ஆக வேண்டியிருக்கிறது என்கிற நிலைக்கு வந்ததாம் நரி.

இந்த நரியின் கதைதான், இந்த மாதம் 17-ம் தேதி சென்னையில் கூடிய திராவிட முன்னேற்றத் தோழர்கள் கட்டியிருக்கும் முடிவை பார்க்கும்போது நினைவுக்கு வரும்.

திராவிடக் கழகத்தை எப்படியும் கைப்பற்றி ஆகவேண்டும்! கழகத்தின் தலைவர் கழகத்தை விட்டு விட்டு ஓடிவிடப் போகிறாரா, இல்லை, ஓடிவிடும்படி செய்ய வேண்டுமா? என்று இரண்டு மூன்று மாதங்களாக, வெளிப்படையாக, மிரட்டி—தாவி—குதித்துக் கொண்டிருந்த கூட்டத்தார் இப்போது திராவிடக் கழகம் 'எட்டாக் கனி' என்று முடிவுக்கு வந்துவிட்டோம் என்கிறார்கள்.

விலகினோமா—ஒதுங்கினோமா என்பதே வினாவும் எதிர் வினாவுமாக இருந்த நிலையை மாற்றிக் கொண்டு, சீச்சீ திராவிடக் கழகம் புளிக்கும் என்று சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு வந்துவிட்டோம் என்கிறார்கள் அவர்கள்.

திராவிட இயக்கத்தின் வரலாற்றிலேயே, இப்போது எங்களால் உண்டாக்கப்பட்ட எதிர்ப்பு ஒன்றுதான், இதற்கு முன் கூட இருந்தவர்களால் செய்யப்பட்ட நாசவேலைகளைக் காட்டிலும் பெரிதாக இருக்கும். இனிமேல் இராமசாமியார் எந்தவகையிலும் தலைவன் என்கிற பெயரோடு இருக்க விட்டுவிடமாட்டோம். என்று எப்படி எப்படியோ காரசாரமாக—கீழ்த்தரமாக எத்தனை வழிகளால் முழக்க முடியுமோ அத்தனை வழிகளாலும் ஆர்ப்பரித்தவர்கள்தான் இவர்கள். இவர்களின் எதிர்ப்பொலியைக் கேட்டு, நமக்கு எதிரியாகத் தங்களை நினைத்துக் கொண்டிருக்கும் சிலர்-மாற்றுக்கட்சியாளர்கள் ஆகாயக் கோட்டையே கட்ட ஆரம்பித்து விட்டார்கள். அடக்குமுறையாலும் ஆதிக்க பலத்தாலும் அடக்கிவிட முடியாத திராவிடக் கழக உயிர் நாடியான பெரியாரை-கேலியாலும் கிண்டலாலும் தோல்வியடையச் செய்துவிட முடியாத இயக்கத்தை—காலித்தனத்தாலும் சில்லரை விஷமங்களாலும் கரைத்துவிட முடியாத கழகத்தை—ஏமாற்று எத்து வேலைக்காரர்கள் எந்த வேஷம் போட்டாலும் இனிமானத்தோடு வயிறு வளர்க்க முடியாது என்கிற நிலையை உண்டாக்கிக் கொண்டிருக்கும் இந்த ஈரோட்டுப்பாசறையை, ஒழித்துக் கட்டுவதற்கு—தரைமட்டமாக்குவதற்கு—ஆழப் புதைப்பதற்கு மாற்றுக்கட்சியிலிருந்து எத்தனையோ சத்திய மூர்த்திகள் (!) கைலாகு கொடுத்தார்கள். ஆட்சிப் பீடமும் இவர்களைக் கொண்டே இவர்களை ஒழிப்போம் என்று ஆதரவுப்படலங்களில் அடி எடுத்து வைத்தது. இவ்வளவுக்குப் பிறகுதான் சீச்சீ திராவிடக் கழகம் புளிக்கும் என்று சொல்லி, திராவிட முன்னேற்றக் கழகம் என்பதாக அமைத்துக் கொண்டிருக்கிறார்கள் இந்தத் தோழர்கள்.

இந்த முடிவைக் கேட்டு திராவிட மக்கள்—திராவிடர் நலத்தில், வளர்ச்சியில் அக்கரையுடைய மக்கள் யாராயிருந்தாலும், திராவிடக் கழகத்தைப் பற்றிக்கொண்டிருந்த ஒரு தொல்லை, தானாகவே தொலைந்து விட்டது என்று மகிழ்ச்சியடையவே செய்வார்கள்.

இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தில் கூடியிருப்பவர்களில், அதாவது முன்னணியில் இருப்பவர்களில், இரண்டொருவரைத்தவிர மிகப் பலர் 2, 3 ஆண்டுகளாகவே இயக்கப்பணிக்கு உள்ளுக்குள் இருந்து கொண்டே எத்தனை முட்டுக் கட்டைகளைப் போட முடியுமோ அவ்வளவையும் செய்து வந்தவர்கள்தான். தலைவர் பெரியார் அவர்களைப் பற்றி வசைபுராணம் கட்டி, எதிர்முகாமை எப்போது, எப்படி ஆரம்பிக்கலாமென்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தவர்கள்தான். இந்த "மிகப்பலர்" இயக்கத்தைத் தங்கள் சௌகரியத்துக்குப் பயன்படுத்திக் கொள்வதில், எவ்வளவு தவறான நடத்தைகளை மேற்கொண்டிருந்தார்கள் என்பதும் அந்த நாணயக் கேடு—பொறுப்பற்ற நடத்தையைப்பற்றி இயக்கத் தோழர்களாலேயே எத்தனை புகார்கள் சொல்லப்பட்டு வந்தன என்பதும், இந்தப் புகார்கள் எழுந்தபோதெல்லாம், தலைவர் பெரியாரவர்கள், கட்டுப்பாடு—நேர்மை ஆகியவற்றையே பெரிதாக மதித்து, புகார்க்கு ஆளானவர்களை, தாம்

# பெரியார் 72-வது பிறந்த நாள்.

★

## 24—9—49 முதல் 30-9-49 வரை கொண்டாடுங்கள்.

திராவிட நாட்டில் மக்கள் சமுதாய இழிவு நீங்கி ஒன்றுபடவும், மூடநம்பிக்கைகள் மிகுந்த மதப் பிடியிலிருந்து விடுதலை அடையவும், அந்நியர் அரசியல் பொருளாதார ஆதிக்கத்திலிருந்து திராவிடம் மீளவும் கடந்த 25 ஆண்டுகளாக அரும் பாடுபட்டுவரும் நம் தந்நலமற்ற தலைவர் பெரியார் அவர்களின் 72-வது பிறந்த நாளை 24—9—49 முதல் 30—9—49 வரை ஒவ்வொரு ஊரிலும் கொண்டாடும்படி திராவிட நாட்டு மக்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அந்நாட்களில் கீழ்க்கண்ட முறைகளில் நிகழ்ச்சிகள் ஏற்படுத்தி 'பெரியார் தம் சீரிய கொள்கைகளைப் பின்பற்றி என்றும் உழைப்போம்' என ஒவ்வொரு திராவிடரும் உறுதி கொள்ள வேண்டுகிறேன்:—

1. ஊர்வலங்கள் நடத்துதல்.
2. பொதுக் கூட்டங்கள் கூடுதல்.
3. கருப்புச்சட்டை அணிதல்.
4. கழகக் கொடியேற்றுவித்தல்.

"தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை"

—வள்ளுவர்.

தி. பொ. வேதாசலம்
மத்திய நிர்வாக கமிட்டி தலைவர்.

---

அவர்களுடைய அதிருப்திக்கு ஆளாகவேண்டியிருக்கும் என்பதைத் தெளிவாக உணர்ந்திருந்தும் எவ்வளவு பலமாக—வெளிப்படையாகக் கண்டித்து வந்தார்கள் என்பதும் இயக்கத் தோழர்களில் பெரும்பாலோர் அறிந்த உண்மையேயாகும்.

தலைவர் பெரியாரவர்களிடம், தங்களின் தாறுமாறான நடத்தையால் வெறுப்புக் கொண்டிருந்த தோழர்கள் அய்க்கியமாகி இருக்கும் இந்த "முன்னேற்ற முன்னணி" ஒதுங்கவில்லை, விலகியே விட்டோம் என்று சொல்வதைக் கேட்டு யார்தான் மகிழ்ச்சியடையாமலிருக்க முடியும்?

"சீச்சீ புளிக்கும்" என்கிற முடிவு கடுமையான போராட்டத்திற்குப் பிறகு, கட்டிய முடிவாக இருந்தாலும், இந்த முடிவுக்கு வந்ததற்கு முன்னேற்றத் தோழர்கள் இப்போது விளக்க ஆரம்பித்திருக்கும் படலம் "மாய்மாலப் படலம்" ஆக இருக்கிறது என்பதை நம்மால் கூறாமல் இருக்க முடியவில்லை.

திராவிடக் கழகத்தின் கொள்கைகள் எவையோ, அவைதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடையவும் கொள்கையாம். ஒரு கொள்கையைக்கூட மாற்றவுமில்லையாம், திருத்தவுமில்லையாம், புகுத்தவுமில்லையாம்.

கழகத்தலைவர் பெரியார் அவர்களைக் குறைகூறுவது—துவேஷத்தை வளர்ப்பது அவர்களுடைய நோக்கமல்லவாம்.

திராவிடக் கழகம், அதனின்றும் பிரித்துவிட முடியாத பெரியார் தலைமையிலேயே இயங்கி வரவேண்டியதுதான். தி. மு. கழகம் தனியாக வேலை செய்து வரவேண்டும்; ஒருவரோடு ஒருவர் முட்டுதல்—மோதுதல் வேண்டியதில்லையாம்.

இப்படியாகக் கண்ணியப்பாதையில் காலடி வைத்து விட்டோம், என்று தங்களுக்குத் தாங்களே இப்போது சபாஷ் கூறத்தொடங்கி இருக்கிறார்கள்.

உண்மைக் காரணத்தை மக்கள் உணர்ந்து கொண்டு விடக்கூடாது; மக்கள்முன் தாங்கள் மகா உத்தமர்களாக நடித்துக்காட்ட வேண்டும் என்கிற, காலங்கடந்த ஒரு மாய்மால நடிப்பே தவிர, இதில் கண்ணியம் எவ்வளவு நிறைந்திருக்கிறது என்பதை, இன்றைக்கில்லாவிட்டாலும் மிக விரைவாகவே மக்கள் தெரிந்து கொண்டு விடுவார்கள்.

லட்சுமிகாந்தத்தையும் தோற்கடித்துவிடும் முறையில், சாக்கடைப்பத்திரிகைகளைத் துணைக்கு வைத்துக் கொண்டு—அப்பேர்ப்பட்ட யோக்கியதையுடையவர்களைத் துணைக்கு வைத்துக் கொண்டு நடத்தும் ஒரு கூட்டுக் கம்பெனி, கண்ணியம் என்கிற போர்வையைப் போர்த்திக்கொண்டிருக்கிறது என்பதை எவ்வளவு காலத்திற்குத்தான் மறைத்துவிட முடியும்? உண்மையாகவே கண்ணியத்தில் கருத்து இருக்குமானால், மிக மிக மட்டரகமான குச்சுக்காரியைக் காட்டிலும் கேவலமாக நடந்துகொண்டுவரும் கூட்டுத் தோழர்களைப்பற்றி, வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ இந்தக் "கூட்டுக் கம்பெனி" இதுவரை கண்டித்து நிறுத்தாதது ஏன்? என்கிற அய்யம் எவருக்கும் உண்டாகத்தானே செய்யும்?

எப்படியோ போகட்டும்! எந்த நோக்கத்தோடு, இப்போது இந்தப் படலம் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், இந்தச் சம்பவத்தை நாம் உண்மையாகவே வரவேற்கிறோம்.

திராவிட மக்களுடைய அரசியல் முன்னேற்றத்துக்கு, திராவிட மக்களின் சமயத் துறையிலும் சமுதாயத்துறையிலும் முதலில் காணப்படும் முன்னேற்றமே வழியாகும் என்பதை உணர்த்தி அந்த வழியில் பாடுபட்டுவரும் திராவிடக் கழகம், இனிமேலாவது, இப்படிப்பட்ட உட்பகை ஒழிந்துவிட்ட காரணத்தால், தன்னாலான அளவுக்குத் தீவிரமாகவே வேலை செய்துவரும் என்பது உறுதி.

திராவிடக் கழகம் இனி எப்படி? திராவிடக் கழகத்தால் இதுநாள் வரை விளம்பரப்படுத்தப்பட்டு வந்த பல எழுத்தாளர்களும் பேச்சாளர்களும், "முன்னேற்றக்காரர்கள்" என்கிற லேபிளைக் குத்திக் கொண்டு விட்டார்களே. இனித் திராவிடக் கழகத்துக்குப் பெருமை இருக்குமா? என்கிற எண்ணம் சிலருக்கு உண்டாகலாம்.

திராவிட இயக்கத்தின் உண்மையான அடிப்படையை உணர்ந்தவர்களுக்கு, இந்தக் கவலையே தேவை இல்லை. இத்தனை எழுத்தாளர்களையும் பேச்சாளர்களையும் உண்டுபண்ணிய பெரியாரவர்களைத்தான் கழகம் இப்போதும் தலைவராகக் கொண்டிருக்கிறது என்பதை எப்படி மறந்துவிட

# சென்னை உலகம்!

★

(சென்ற இதழ் தொடர்ச்சி)

அதாவது எந்த ஜனங்கள் சமூக சீர்திருத்தமில்லாமல், அரசியல் சுதந்தர இயக்கம் நடத்துகின்றார்களோ அவர்கள் தேசத்தின் உண்மை நிலையை அறியவில்லையென்பதுதான். எதுவரைக்கும் அவர்கள் உண்மையாகக் கபடமற்று ஹிந்து கூட்டத்தின் (சமாஜத்தின்) ஆசாரப் புரட்டுகளை மாற்றுவதற்கு முயற்சி செய்யவில்லையோ அதுவரைக்கும் விடுதலை அடைவது என்பது ஒருக்காலும் முடியாத காரியம் என்பேன். நான் எப்பொழுதும் இந்த அபிப்பிராயமுடையவனாயிருந்த போதிலும் சென்னையின் நிலைமையைப் பார்த்தபிறகு இந்த எண்ணம் முற்றிலும் உறுதிப்பட்டுவிட்டது. அன்றியும் சென்னையில் இதுவரையில் ஆசாரச் சீர்திருத்த விஷயமாக ஒரு காரியமும் செய்யப்படவில்லை என்றே சொல்லுவேன். அங்கே சில கனவான்கள் பிரார்த்தனை சமாஜத்தினுடையவும் பிரம்ம ஞான சபை (தியோசாபிகள் சொஸைட்டி)யினுடையவும் நோக்கங்களைக் கொண்டு ஆசாரச் சீர்திருத்தத்திலீடுபட்டிருக்கிறார்கள். ஆனால் படிப்புள்ள ஜனங்கள் கூட ஆசாரச் சீர்திருத்தத்தை மத விரோதமென்றும், அனாவசியமென்றும் கருதுகிறார்கள்.

## ஸ்ரீரங்கம் துராசாரம்.

இத்தடவையிலும் சென்னை மாகாணத்தில் ஸ்ரீரங்கத்திலுள்ள பெரிய வைணவக் கோவிலைப் பார்த்தேன். இக்கோவிலில் ஸ்ரீரங்கநாதரின் பூஜை நடக்கிறது. இராமனுஜ ஆச்சாரியின் விசிஷ்டாத்வைத முறைப்படி இங்கே தெய்வவழிபாடு நடக்கிறதென்று சொல்லுகிறார்கள். ஆனால் (என்னை மன்னிக்க வேண்டும்) நான் அந்தக் கோவிலைச் சுற்றியுள்ள எல்லா விஷயங்களையும் கண்ணுற்று மிகவும் வெறுப்படைந்தேன். வெகு நேரம் வரை ஆழ்ந்த துக்கத்தில் மூழ்கிவிட்டேன். எனக்கு அந்தக் கோவிலில் மனிதத்தன்மைக்கு ஏற்ற ஒரு விஷயமும் புலப்படவில்லை. அவ்விடத்தில் நடக்கும் ஆசாரங்கள் மனிதன் சகிக்கக்கூடியதல்ல. பொட்டுகளையும் பட்டை நாமங்களையும் தீட்டிய நெற்றியுடைய பெரிய பெரிய ஆங்கிலங் கற்ற பண்டிதர்களுடைய சட்டாஷணையைக் கேட்டதிலிருந்து வெறும் புத்தகங்களை வாசித்ததால் மட்டும் மனிதனுக்கு அறிவு ஏற்பட்டுவிடாது என்று நிர்ணயம் செய்துகொண்டேன். நான் ஏதோ ஒரு மதத்தைப் பிரசாரம் செய்கிறவனல்ல. நான் எல்லா மதங்களினாலும் துக்கமடைந்து மதக்கட்டுப்பாடுகளிலிருந்து விலகிக்கொண்டவன். ஆனால் எது மனிதனுக்கு நன்மை பயக்குமென்றும் எது நன்மை பயக்காதென்றும் தெரிவதற்குப் போதிய அறிவும் சக்தியும் என்னிடமிருக்கிறது. சென்னை மாகாணத்தில் உள்ள கோவில்களினுடைய பூஜைமுதலிய நடைமுறை நம்மை சமூக வீழ்ச்சி நரகத்திற்கே கூட்டிச் செல்லுகிறதென்பது எனக்கு நன்றாய்ப் புலப்பட்டுவிட்டது. எந்தெந்தக் கோவில்களில் தெய்வ வழிபாட்டின் பெயரால் துராசாரம் (விபசாரம்) நடக்கிறதோ, எங்கே இதுவரையிலும் ஜனங்கள் விபசாரத் தொழிலைக் கோவில்களின் வழிபாட்டின் ஒரு முக்கியமாகக் கருதுகின்றனரோ, எமது ஜன சமூகத்தில் நாளிதுவரை யாராவதொருவருடைய கடவுள் பக்தியைத் தெரிவிப்பதற்கு நெற்றியில் ராமம் முதலிய குறிகள் நீண்டோ அகன்றோ வட்டவடிவமாகவோ இருக்க வேண்டியது அவசியமென்றும் கருதப்படுகின்றதோ அந்த ஜன சமூகத்தில் அரசியல் சுதந்தரத்தைப் பரவச் செய்வது ஒருக்காலமும் முடியாத காரியம். மத சம்பந்தமாகவோ இராஜீய சம்மந்தமாகவோ சமூக சம்பந்தமாகவோ மற்றும் வேறு எது சம்பந்தமாகவானாலும் சுதந்தரப்பிரசாரம் செய்ய முற்பட்டால் அதில் முதலாவதாக மனித சுதந்தரம் கொஞ்சமாவது வெளிப்படவேண்டும். எந்த மதத்தில் பகுத்தறிவோடு யோசனை செய்யும் மனோபாவத்திற்கு இடம் சற்றேனும் இல்லையோ அதில் இராஜீய சுதந்தர நோக்கத்தைப் புகுத்தல் அசாத்தியமில்லாவிட்டாலும் நிச்சயமாகச் சுலபத்தில் சாத்தியமாகக்கூடிய காரியம் அல்ல என்றே சொல்லுவேன்.

## சென்னைக் காரர் ஜாலவித்தை.

நமது சென்னை சகோதரர்கள் பெரிய ஜாலவித்தைக்காரர்கள். வாய்க்கணக்கில் பெயர் படைத்தவர்கள். வேதாந்தம் பேசுவதிலோ இணையற்றவர்கள். எழுதுவதிலும், பேசுவதிலும் மகாமேதாவிகள். ஆனால் செய்கையிலும் மத விஷயத்திலும் அவர்களுடைய நடவடிக்கை கீழ்க்கண்ட இரண்டில் ஒன்றாகத்தானிருக்கவேண்டும். அதாவது அவர்களுடைய புத்தி அத்துறையில் செல்லவே விடாதவர்கள். அல்லது மிகவும் கொடிய வஞ்சகர்களாக இருக்க வேண்டும்.

அடிமைத்தனம் வஞ்சகத்தின் தாயகமாகும். எங்கே மதத்தின் கொள்கைகளின்படி வெளிவேஷத்தையே முக்கியமாகக் கொள்ளப்படுகிறதோ அங்கே முதலில் புத்தியின் அடிமைத்தனமும், பிறகு சரீரத்தினடிமைத்தனமும் உண்டாகி ஒரே வாழ்வில் மேற்படி இரண்டு ரூபங்களும் ஏற்படுகின்றன. சென்னையின் மதத்தின் நிலைமையையும் சமூகத்தின் நிலைமையையும் பார்த்து சென்னைக்கு ஒரு தயானந்தரிஷியின் அவசியமிருக்கிறதென்று எனக்கு எண்ணமுண்டாயிற்று. சென்னையைப் போலொத்த குருட்டு நம்பிக்கை கொண்ட இந்த மாகாணத்தை சீர்திருத்தத்திற்கு கொண்டுவருவதென்பது ஆரிய சமாஜிகளால் கூட

---

முடியும் என்று கேட்கிறோம்.

கடைசியாக இதைப்பற்றி விடுதலை கூறியிருக்கும் கருத்தைக் கூறி இதனை முடிக்கிறோம்.

"தலைவர் பெரியாருக்கு பெருமை இருந்தால், தலைவர் பெரியாரிடத்தில் நாணயம், உண்மை, சுயநல மற்ற உழைப்பு இருந்தால் கழகத்துக்கும் பெருமை, மரியாதை இருக்கும். அதுபோலவே எந்தக் கட்சிக்கும், அதற்கு ஏற்ற பெருமையுண்டு. ஆதலால் அதைப் பற்றிப் போதுமக்களுக்கும் கவலை தேவை இல்லை"

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

முடியாது என்பதாகத் தோன்று கின்றது. நாளிதுவரை ஏற்பட்ட சீர்திருத்தஸ்தாபனமாகிய பெரிய கப்பல்களெல்லாம் சென்னை என்கின்ற பாறையில் மோதி உடைபட்டு மூழ்கிவிட்டதாகவே தெரிய வருகிறது. ஆரிய சமாஜத்தாலும் மதராஸில் சந்தோஷகரமான வேலை எதுவும் செய்ய முடியவில்லை. சென்னையில் கரைகண்ட பயமற்ற சீர்திருத்தக்காரர்களின் தேவை இருக்கிறது.

இதுவரையிலும் சென்னையில் ஆரிய சமாஜத்தைப் பரப்புவதற்கு எவ்வளவு முயற்சி செய்யப்பட்டதோ அவ்வளவுக்குப் போதிய பலன் கிடைக்கவில்லை. அவ்விடத்திய சமய சமூகநிலைமை விஷக்காற்று சூழ்ந்ததாயிருக்கின்றது. மிகக் குறுகிய நோக்கமுடையதாயிருக்கிறது. இந் நிலைமையில் இம்மாகாணத்தில் கொஞ்சமாவது காரிய சித்தியடைவதற்குத் தக்க யோக்கியதையுடைய ஒரு தீரன் வேண்டும். சென்னை மாகாணத்தாருள்ளேயே அப்படி ஒருவர் உண்டாவார் என்ற நம்பிக்கை எனக்கில்லை. மற்ற மாகாணங்களைக் காட்டிலும் இம்மாகாணத்திலுள்ள பெண்களுங்கூடப் படித்தவர்களாகவே இருக்கிறார்கள். இதுதான் நம்பிக்கையைக் கொடுக்கக்கூடிய வழி. பெண்களின் விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் காரியம் செய்து காண்பிப்பார்களென்று நம்புகிறேன். ஏனெனில் சென்னை மாகாண ஆண்பிள்ளைகளின் யோக்கியதையில் எனக்கு சிறிதும் நம்பிக்கையில்லை. அந்நாட்டு ஆண் மக்கள் வெறும் பேச்சுக்காரர்கள்; வாய்ச்சண்டை செய்பவர்கள்; காரியத்திற்கு உதவாதவர்கள்.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

பாவும் அகற்பாவும்-பார்ப்பனக் குமரனும் அரச கன்னிகையும் மயங்கிக் கூடிவாழ்தல்போல மருள் பூண்டு கூடி நிற்றலால் மருட்பா எனப்பட்டது'' என வரையப் பட்டுள்ளது. ஆசிரியப்பா—அரசர் சாதியே தவிர அரசர் கன்னிகையல்ல. எனவே, "பார்ப்பனக்குமரனும் அரசகுமரனும் மயங்கிக் (கணவன் மனைவி போலக்) கூடி வாழ்தல் போல்'' என்று உரையிருப்பின் விசேடமாக இருக்கும்.

இத்தகைய பாகங்களை மறுமறு பதிப்புகளிலாவது நீக்குதல் அவசியம் என்பதை அறிவித்துக் கொள்கிறேன்.

எனவே, தமிழ்ப்பெரியோர்களே இந்த பாட்டியல் நூலை என்ன செய்யப்போகிறீர்கள்?

இங்கர்சால் சொற்பொழிவு

# உண்மை.

தமிழாக்கம்: மா. சு. நெடுஞ்சேரலாதன்.

இவையாவும் கிருஸ்துவ காட்டுமிராண்டித்தனமான அழியா தண்டனையை பற்றிய கற்பனை கதைகளை நம்பினதால்—மோட்சபரிசு, நம்பிக்கையினால் கிடைக்கும் என்று நம்பினதால், செய்தவைகளாகும். அப்படி நம்பியதன் பலனாக அவர்கள் உரிமையான சிந்தனைக்கும்—பேச்சுக்கும் எதிரிகளாயிருந்தனர்—உள்ளொளியை பற்றி அவர்கள் கவலை கொண்டதில்லை, உளத்தூய்மையை பற்றி கவலை கொண்டதில்லை, மனிதனின் மனிதத்தன்மையை பற்றியும் கவலை கொண்டதில்லை. எல்லா காலத்தும் பெரும்பான்மையான பாதிரிகள், இதயமற்றவர்களாக, இரக்கமற்றவர்களாக இருந்தனர். அவர்கள் வதைத்துக் கொண்டும், வேதனையுறச்செய்து கொண்டுமிருந்தனர். தோல்வியுற்றபோது அவர்கள் வளைந்து, குழைவார்கள். வெற்றி பெறும்போது அவர்கள் கொலை செய்வார்கள். இரக்கம் என்ற மலர் என்றுமே அவர்கள் உள்ளத்திலும், சிந்தனையிலும் மலர்ந்ததேயில்லை. நீதி இவைகளை தனித்து வைக்கவில்லை. இப்போது அவர்கள் முன்போல் கொடூரமானவர்களாக இருக்கவில்லை. அவர்கள் தங்கள் வன்மையை இழந்துவிட்டனர், எனினும் இன்னும் முடியாதவைகளை நிலைநாட்ட முயற்சிக்கின்றனர். தங்கள் பேழையை "மையர்களின் பொன்னால்'' நிரப்பிக் கொண்டு தாங்கள் செல்வவான்கள் என எண்ணிக் கொள்கிறார்கள். தங்கள் மூளைகளில் தவறுகளை திணித்துக் கொண்டு தாங்கள் அறிவுடையவர்கள் என்று எண்ணிக் கொள்கிறார்கள். அவர்கள் உண்மையற்ற, மக்களிடம் ஊறிப்போன கதைகளில் நம்பிக்கை கொண்டு, புனையிலும், புரட்டிலும், பக்தி கொண்டு—தங்கள் உள்ளங்களை பேய்களுக்கும்—பிசாசுகளுக்கும் கொடுத்து, இல்லாத ஒன்றை கண்டு பிடிக்கும் தொழிலே ஈடுபட்டார்கள்.

அவர்கள் ஒரு அதிகாரியை—ஒரு தலைவனை—ஒரு அயோக்கியனை வான மண்டலத்தில் வைத்து, தன் துணை மக்களை அடிமைகளாக்கினார்கள். தெளியும் புனிதமான ஒரு பகுதித் தொழிலை மக்களுக்கு போதித்தார்கள். அவர்கள் மக்களின் மனித வீரத்தை வெறுத்தார்கள். அவர்கள் பழிவாங்க விரும்பினார்கள்.

அவர்கள் தங்கள் கைகளை கற்பனை நரகத்து நெருப்பிலே சூடேற்றிக் கொண்டார்கள்.

நான் நரகம் இல்லை என்பதை காட்டுகிறேன், அவர்கள் தங்கள் எண்ணங்கள் அழிக்கப் படுகிறதே என்பதற்காக என்னை மறுக்கிறார்கள்.

கதை ஒன்றுண்டு. ஹோரஸ் கிரீலி என்பான் ஒரு குளிர்ந்த இரவில், பட்டணத்தில் கடை ஒன்றுக்குச் சென்று, நெருப்புச்சட்டி முன் அமர்ந்து, கோட்டின் பொத்தானை கழற்றி, கையை விரித்துக் கொண்டானாம்.

சிறிது நேரத்தில் அக்கடையில் குமஸ்தாவாக இருந்த ஒருசிறுவன் வந்து "கிரீலி அவர்களே, சட்டியில் நெருப்பில்லையே'' என்றானாம்.

"நீ மடையன். என்னிடமா கூறுகிறாய்? எனக்கு உண்மையான சூடு கிடைக்கிறதே!'' என்றானாம் கிரீலி.

III

வேதாந்தத்தை தவிர எல்லா விஞ்ஞானமும் உண்மை யறிதற்காக அவா—கொண்டுள்ளது. ஒரு உண்மையை கண்டு, கண்டு

பிடிப்பாளரின் புருவத்தில் பெருமையின் சின்னம் ஒட்டவைக்கப் படுகிறது.

வேதாந்திகள் கழகத்திலே, ஒரு பேராசிரியர், உண்மையை கொள்கைக்கு எதிரடையாகக் கண்டுபிடிப்பாரானால் அதை அவன் மறைவாக வைத்துக் கொள்ளவேண்டும். அல்லது மறுக்கவேண்டும், அன்றேல் தன்னிடத்தையாவது இழக்கவேண்டும். உளதூய்மை குற்றமாகும்; அச்சுறுத்தலும், நேர்மையற்ற தன்மையும் புனிதமாகும்.

ஒரு உண்மை, கொள்கைக்கெதிராக இருப்பின், அதை ஒரு பொய்யென்று மறுக்கப்படும்: அந்த உண்மையை உரைத்த, வெளிப்படுத்திய மனிதன் ஒரு பொய்யனாகும். எல்லா பேராசிரியர்களும், நேர்மையற்ற காற்றையே வளிக்கின்றனர். வேதாந்தம் ஒன்றே பொய்யான விஞ்ஞானமாகும்—அது ஒன்றே நம்பிக்கையின்மேல்—கொடுமையின்மேல் கட்டப்பட்டதாகும்—அது ஒன்றே ஆராய்ச்சியை மறுக்கிறது, சிந்தனையையும், வினவுதலையும் வெறுத்து ஒதுக்குகின்றது.

எல்லா பெரும் கத்தோலிக்க ஆலைய வேதாந்திகள் சிந்தனையை வெறுக்கிறார்கள், அதன் காரணமாக மனிதத் தன்மையின் எதிரிகளால் ஏற்பட்ட ஒளிகள், அழித்து அழைத்துச் செல்லும் பாதையாக இருக்கிறது. எல்லா பெரும் புராட்டஸ்டன்ட் வேதாந்திகள், லூத்தர் முதல் இன்றுள்ள வைதீக ஆலைய அமைச்சர்கள் வரை, சிந்தனையின் எதிரிகளாயிருந்தனர். எல்லா காலத்தும், எல்லா அய்திக ஆலையங்களும் விஞ்ஞானத்தின் எதிரியாக இருந்திருக்கிறது. வானாராய்ச்சியாளரை குற்றவாளிகள் போன்றும், நில ஆராய்ச்சியாளரை கொலையாளிகளைப் போலவும், அவர்கள் எதிர்த்தார்கள். மருத்துவர்களை அவர்கள் கடவுளின் எதிரியாக நினைத்தனர். ஏனெனில் அவர்கள் கடவுளின் கருணையை குறைக்க முற்படுகின்றனராம். உயிர் வகை ஆராய்ச்சியாளர்கள், உடற்கூறு வல்லுனர்கள், பழமையாராய்ச்சியாளர்கள், பழய எழுத்துக்களை படிப்போர்கள், அழிந்த நாடுகளை அகழ்ந்து காண்போர், எல்லோரையும் வேதாந்திகள் வெறுத்தனர். இவர்கள் விவிலிய நூலுக்கு எதிராக எதையாகிலும் கண்டு பிடித்து விடுவார்கள் என்ற அச்சம் அவர்களுக்கு.

மற்ற மதங்களைப் படிப்பவர்களை வேதாந்திகள் எதிர்த்தனர். கிறிஸ்து மதம் வளர்ந்ததல்ல—உள்ளது சிறந்ததல்ல—ஆனால் உரைக்கப்பட்டதாகும் என்று அவர்கள் வலியுறுத்தினர். ஏனைய இயற்கை மதங்களைப் போல் கிறிஸ்து மதமும் இயற்கை சம்பந்தப்பட்டது என்பதை அவர்கள் மறுத்தார்கள்.

எல்லா அய்யங்கட்கு அப்பால், உண்மை நமக்கு இப்போது காண்பிக்கிறது. எல்லா மதங்களும் ஒத்த நிலையில், ஒத்த காரணத்தால் எழுந்தன என்பதை; எனினும் ஒரு வைதீகக் கிறிஸ்துவ வேதாந்தியும் இவ்வுண்மையை ஒப்புக்கொள்வதில்லை. அவன் தன் கொள்கையை—வேத வாக்கைக் காப்பாற்றவேண்டும். அவன் உண்மையுடையவனாக இருக்க முடியாது. நேர்மையான பள்ளியில் அவன் படித்ததில்லை. அவன் உண்மையுடையவனாக இருக்க வேண்டும் என்று போதிக்கப்படவில்லை. நம்ப வேண்டும், நம்பியதைக் காப்பாற்ற வேண்டும்; வாதத்திற்கெதிராக மட்டுமல்ல, உண்மைக்கு எதிராகவும் காப்பாற்றவேண்டும் என்று அவனுக்குப் போதனை கொடுக்கப்பட்டுள்ளது.

உலகிலேயே ஒரு வேதாந்திகூட கிடையாது, விவிலிய நூல் தேவ வாக்கு என்பதற்கான சிறிய—மிகச் சிறிய நடைமுறை ஆதாரத்தைக் காண்பிக்க.

'ரூத்' புத்தகத்தை தேவ வாக்குப் பெற்ற மனிதனால் எழுதப் பெற்றது என்பதற்கு ஆதாரம் எங்கே? சாலமன் பாடல்களுக்கு, கடவுள்தான் ஆசிரியர் என்பதற்கு ஆதாரமெங்கே? எந்த ஒரு மனிதனும் தேவவாக்கு பெற்றவன் என்பதற்கு ஆதாரமெங்கே? கிருஸ்துதான் முன்பும், இப்போதும், கடவுள் என்பதற்கு ஆதாரமெங்கே? மோட்ச, நரகம் இருக்கின்றது என்பதற்கு ஆதாரமெங்கே? ஒன்றுமே கிடையாது.

கந்தர்வர்களும், கருப்பர்களும், பேய்களும், கடவுள்களும் இருப்பதற்கு ஆதாரமெங்கே? இவைகளை பார்த்ததோ, தொட்டதோ, உண்டா? நம் சிந்தனையில் ஒன்றாகிலும் இவைகள் உள்ளன என்று சாட்சியளிக்குமா?

(தொடரும்)

---

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

டில் நடக்கும்படியான பலவகைப்பட்ட கொலைகளுக்கும், களவுகளுக்கும் முக்கிய காரணமென்ன? மதமேயாகும்.

யாரோ ஒரு பாதிரியார் எழுதின நூலில் மகமத் நபியைத் தாக்கி எழுதினாராம். உடனே மகமதியர்களுக்கெல்லாம் பெருத்த ஆவேசம் ஏற்பட்டுவிட்டது. இன்று யாரேனும் ஒரு முகதியர் புத்தகத்தில் இயேசுவைத் தாக்கி எழுதினால் உடனே கிருஸ்துவர்களுக்கெல்லாம் கோபம் வந்துவிடும். இன்னும் வேறொருவர் இந்து மதத்தைத் தாக்கி எழுதினால் இந்துக்களுக்கெல்லாம் கோபம் வந்துவிடும். பார்த்தீர்களா! மதத்தின் அட்டூழியம். அது சும்மா மனிதனை விட்டுவிடாது. சகோதரத்துவத்தை நிலைநிறுத்தாது சண்டைச் சச்சரவை மூட்டிக் கொண்டுதானிருக்கும். ஜாதிவித்தியாசம், நிறவித்தியாசம், மதவித்தியாசம், ஒழுக்கம்-பழக்கம் முதலிய வித்தியாசங்களைக் கற்பித்து மனிதனை மனிதன் என்ற முறையில் பாவிக்காமல் கேவலப்படுத்தி மனித சகோதரத்துவத்தையும் கெடுக்கும்.

இவைகளினால் நிகழ்ந்துள்ள கொடிய சண்டை சச்சரவுகளனைத்தும் சரித்திரம் படித்தவர்களுக்கு நன்கு விளங்கும். களங்கமற்ற ஒரு மனித சமூகத்தை ஸ்தாபித்து உலக சகோதரத்துவத்தை ஏற்படுத்த வேண்டுமானால், மதத்தை நாம் வேரறுத்தெறிய வேண்டும் என்பதில் அய்யமில்லை. ஆதலால் தோழர்களே! நமது நிலைமையை உணர வேண்டிய சமயம் நமக்கு வாய்த்துவிட்டது. இப்பொழுதும் மதம் என்னும் பேயினின்றும் விடுதலைப்பட்டு சுகமாக வாழ்தல் அவசியமாயின் மதத்தை ஆதரிக்காமல் 'பகுத்தறிவை' ஆதரித்துத்தான் நிற்க வேண்டும்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யவற்றைக் கற்றுத்தெளிவர். மணமுடித்துக் கொண்டபின் வேற்றுநாடுகட்குச் சென்று அந்நாட்டு மொழிகளை ஒருவாறு பேசப் பழகி, அந்நாட்டு மக்களின்பழக்க வழக்கங்களையும், கலை நுட்பங்களையும், தொழில் நுணுக்கங்களையும் கற்றுத் தெரிந்து வருவர். ஓதற்பிரிவின் கால அளவு மூன்றாண்டாகும். ஏனைப்பிரிவுகளெல்லாம் ஓராண்டுக்குட்பட்டவையே யாகும். ஓராண்டுக்குமேல் பிரிந்திருக்கக்கூடாது. வெளிநாடுகளுக்குச் சென்று, அந்நாடுகள் பலவற்றையும் சுற்றிபபார்த்து, அந்நாட்டு நாகரிகங்களைத் தெரிந்து வர்வேண்டு மாகையால், ஓதற்பிரிவுக்கு மூன்றாண்டு வேண்டிய தாயிற்று. இன்று செல்வரும், அறிஞரும் அய்ரோப்பா முதலிய அயல்நாடுகளிற் சுற்றுப் பயணம் செய்து, அந்நாட்டுக் கலை, தொழில் முதலியவற்றின் நுட்பங்களைத் தெரிந்து வருவது போலவே, அன்றும் கடல் கடந்து மேல்நாடு கீழ்நாடுகளுக்குச் சென்று, அந்நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து, அந்நாட்டுக் கலை முதலியவற்றைத் தெரிந்து வந்தனர். இதுவே ஓதற்பிரிவாகும். அக்கால் மேனாட்டுடனும் கீழ்நாட்டுடனும் தமிழ் நாடு நடத்தி வந்த வணிகமே இதற்குச் சான்றாகும்.

2. பகைவயிற் பிரிவு—பொது நன்மையில் மாறுபட்டுப் போர் தொடுத்தோரை அடக்கப் பிரிதல். இது பகைப்பிரிவு, பகைதணிவினைப் பிரிவு எனவும் வழங்கும். தன்மீது பகை கொண்டு பொரவந்தானோடு தானே சென்று பொருவதன்றி, இரண்டு அரசர்கள் தம்முட் பகை கொண்டு போர் தொடுக்கின் அவர்களில் ஒருவர்க்குப் படைத் துணையாகச் செல்லுதல் வேந்தற்குற்றுழிப் பிரிவு, அல்லது துணைவயிற் பிரிவு எனப்படும். இஃதும் பகைவயிற் பிரிவே யாகும்.

3. தூதிற்பிரிவு—பகை கொண்ட இருவரை அப்பகை நீக்கி ஒன்று கூட்டப்பிரிதல். இது சந்து செய்தல் எனப்படும். சந்து—உடன்பாடு. ஓதல், பகை, தூது என்னும் இம்மூன்றும் நாட்டு மக்களின் நல்வுரிமையைப் பாதுகாக்கும் பொதுநலப் பிரிவாகும். வெளிநாடுகளில் கற்றவற்றைத் தன்னாட்டினர்க்குப் பயன்படுத்துதலின் ஓதலும் பொதுநலத் தொண்டாயிற்று. எளியரும், அறிவிலாரும், வெளிநாடு செல்லுதலும், வலியில்லார் பகை வெல்லுதலும், அறிவில்லார் தூது செல்லுதலும் முடியாதாகையால், செல்வமும் வலியும் அறிவுமுள்ள உயர்ந்தோரே இம்மூன்று பிரிவுக்கும் உரியராவர்.

4, 5. காவற்பிரிவும், பொருட்பிரிவும்: ஒரு நாட்டில் எப்போதும் நல்லரும் பொல்லரும் இருப்பது இயல்பே. இவ்வேறுபாடு இன்றேல் அரசு தேவையில்லை. இவ்வேறுபாட்டால் நாட்டு மக்களிடையுண்டாகும் சீர்கேட்டைத்திருத்தியமைத்துப் பின்னர் அத்தகைய சீர்கேடுண்டாகாமல் காத்தற் பொருட்டும், அரசிறையாக ஏற்படுத்தப்பட்டுள்ள வரிவாங்குதற் பொருட்டும் அரசனுக்குப் பிரிவு ஏற்படும். இவை காவற்பிரிவும், பொருட் பிரிவுமாகும். பண்டு தமிழகம் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என நானிலமாகக் கூறுபட்டிருந்ததால் அவ்வந்நிலம் வாழ்மக்கள் மன வேறுபாட்டாலும், ஆள்வோராலும் நாட்டில் ஒழுக்கக்கேடு ஏற்படும். அதாவது, ஊர்மக்களுக்குள் கட்சி வேற்றுமையும், நாட்டதிகளும், அரசியல் அலுவலாளர்களும் நாட்டு மக்களுக்குள் ஓரவஞ்சனையாக நட்புப் பகை பாராட்டுதலும், கைக்கூலி வாங்கிக்கொண்டு காரியம் செய்தலும், முறை பிறழ வரிவாங்குதலும், குடிகளை வருத்தி வரிவாங்குதலும் ஆகிய சீர்கேடுகள் உண்டாகும். இவைநேராமலிருக்கவும், அவ்வாறு ஒரு சில இடங்களில் நேரின் மறுபடியும் நேராமலிருக்கவும் அரசன் அடிக்கடி தன் நாட்டைச் சுற்றிப் பார்த்து வருவான் (அகத்-23). அரசன் ஆணையாளரும், அதிகாரிகளும், அலுவலாளரும் பிரிதலும் அரசனுக்காகவே பிரிதலான் அரசன் பிரிவில் அடங்கும்.

இன்றும் மாநிலத்தலைவரும் (கவர்னர்) கோட்டத்தலைவரும் (கலெக்டர்) நாட்டைச் சுற்றிப் பார்த்தலும், ஊராளர் முறை பிறழ வரிவாங்கா திருத்தற்பொருட்டுக் கூற்றத்தலைவரும் (தாசில்தார்), நிலவரிப் பார்வையாளரும் (R. I.) மேற்பார்வையிடுதலும் இப்பிரிவை நினைப்பூட்டும். இது பழந்தமிழரசர்களின் முறைபிறழா முதன்மையான செங்கோன்மையை இனிது விளக்கும். இக்காவற்பிரிவும் பொருட் பிரிவும் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், என்னும் நால்வர்க்கும் உரியனவாகும்.

இனிக் களவுக்காலத்தே, களவு வெளிப்பட்டு மணம் செய்து கொள்ள உடன்பட்ட தலைவன், அம்மணவினைச் செலவுக்காகப் பொருள் கொண்டுவரத் தன்னூர்க்குச் செல்லும் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவும், வாணிகம் செய்து பொருளீட்ட உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பிரியும் பொருள் வயிற்பிரிவும் பொருள்வயிற் பிரிவில் அடங்கும். பொருளீட்டுதற்காக மனைவியைப் பிரிந்து செல்வதெல்லாம் பொருட் பிரிவெனவேபடும். வணிகத்தின் பொருட்டு வெளிநாடு செல்லினும் ஓராண்டுக்குள் வந்துவிடுவரென்க. மேல்காற்றும், கீழ்காற்றும் ஆண்டுக்கொருமுறை மாறி வீசுவது இதற்கேற்றதாக இருந்தது. இப்பருவக் காற்றைக் கொண்டுதான் வெளிநாட்டுப் பிரிவின் காலத்தை வரையறை செய்திருக்க வேண்டும்.

அரசன் தனக்குப் பதிலாகத் தன் தொழில் முடிக்க வணிகரையும், வேளாளரையும் ஏற்படுத்துவான். அவர்கள் அரசன் சார்பாளராய்—அரசனுக்குப் பதிலாக—தலைமை தாங்கிச் சென்று, அரசன் தொழிலான பகைவெல்லல், நாடுகாத்தல், பொருளீட்டல், சந்து செய்தல் ஆகியவற்றைச் செய்வர். அந்தணர் துறவிகளாதலால் தலைமை தாங்கிச் செல்லார். அடியோர், வினைவலர் முதலிய எல்லோரும் அரச காரியம் பார்த்தற்குரியரேனும் வணிகரும் வேளாளருமே அரசனால் சிறப்புப் பெற்று அரசனுக்கீடாக அவன் தொழில்மேல் செலற்குரியராவர். சிறுத் தொண்டர், கருணாகரத் தொண்டைமான் முதலியோர் தலைமை தாங்கிச் சென்றிருத்தலையறிக.

தூதிற்பிரிவு அந்தணர், அரசர்க்குப் பெரும்பான்மையும், வணிக வேளாளர்க்குச் சிறுபான்மையும் ஆகும். அரசன் கட்டளைபெற்றே வெளிநாடுகளில் சென்று பொருளீட்டும் உரிமை இருந்து வந்தது.

ரோஜா முத்தையா

அரசன் கட்டளையின்றி—உடன்பாடு பெறாமல்—வணிகரும் அயல் நாடுகட்குப் பொருளீட்டச் செல்லுதல் கூடாது. அவ்வளவு கட்டுப்பாடான ஆட்சி முறை நடந்து வந்தது. நன்னிலத்தே விளைவிக்கும் வேளாளர் வேற்று நாட்டுக்குச் செல்ல வேண்டியதேயில்லை. எனினும், ஒவ்வொருகால் ஒரு சிலர் செல்வர். அங்ஙனம் செல்வோரும் அறிவொழுக்கங்களிற் சிறந்த ஆன்றோரே சென்று, அறந்தலைப் பிரியாமல்—நல்ல வழியில்—பொருளீட்டுவர். நம் முன்னையோரின் நேர்மையே நேர்மை! அவ்வாறு நேர்மைக்கு உறைவிடமாய் இருந்த தமிழகந்தான் அயலார் பழக்க வழக்கங்களால் இன்று கைக் கூலிக்கும் கள்ளத்தனத்திற்கும் உறைவிடமாய் இருந்து வருகிறது. என்று பழம் பெருமையை அடைந்து பழி துடைத்து வாழுமோ!

'திரை கடலோடியும் திரவியம் தேடு' என்றது ஒரு பெண்ணேயெனினும், மனைவியைக் கூட்டிக் கொண்டு கடல் கடந்து வெளிநாடுகட்குச் செல்லும் வழக்கம் பண்டில்லை. ஆண்மக்களே வெளிநாடுகளில் சென்று பொருளீட்டிவந்தனர்; கடல் கடந்து வெளிநாடுகட்கு மனைவியுடன் செல்லும் வழக்கம் இல்லையேயன்றி உள்நாட்டில் மனைவியுடன் பொருளீட்டச் செல்லும் வழக்கம் அன்று உண்டு. கோவலன் கண்ணகியுடன் மதுரைக்குச் சென்றது இதற்குச் சான்றாகும். பொருட்பிரிவு காலிற்பிரிவு, கலத்திற்பிரிவென இருவகைப்படும். காலிற்பிரிவு—உள்நாட்டில் பிரிதல். கலம்—கப்பல். கலத்திற்பிரிவே மெல்லியலாராகிய பெண்களுக்கு விலக்காகும். இன்னும், தனவணிகரும், பிறவணிகமக்களும் வணிகத்தின் பொருட்டு அயல்நாடுகளில் தங்கநேரினுங்கூடப் பெண்களோடு சென்றுதங்காமல் தனியாகவே சென்றிருத்தல் இதனைநினைப்பூட்டும்.

தாடகை, காமவல்லி, சிந்தாதேவி, மதுராபதி, அல்லி, தடாதகை முதலிய தமிழ்ப் பெண்மணிகள், நாடுகாத்தும், போர்புரிந்தும் புகழுடன் வாழ்ந்திருப்பதால், காவற்பிரிவும், பகைவயிற்பிரிவும் பெண்களுக்கு விலக்கல்ல. அதியமானுக்காக மலையமான் திருமுடிக்காரியிடம் ஔவையார் தூது சென்றிருப்பதால் தூதும் பெண்களுக்கு விலக்கல்ல. அகத்திணையில் பிரிவென்பதே மனைவியைப் பிரிந்து கணவன் செல்வதேயாகலான் செய்யுள் வழக்கில் பெண்கள் பிரிவதாகச் செய்யுள் செய்வதில்லை.

(தொடரும்)

* * *

(தொடர்ச்சி 1-ம் பக்கம்)

இருக்குமானால், அவர்களுக்கு வாழ்வில் இருக்கும் நம்பிக்கை நாளாவட்டத்தில் குறைந்துவிடுகிறது—மறைந்தும் போகிறது. இவர்களுக்குக் கருப்பஞ்சாறு கசக்கும், கற்கண்டும் துவர்க்கும். யாழின் இசையும், குயிலின் கீதமும்கூட கர்ணகடூரமாகத் தோன்றும்.

எண்ணங்கள் ஈடேறாமல் போகும்பொழுதும் இலட்சியத்தில் வெற்றிபெற முடியாத பொழுதும், ஆசைக் கனவுகள் நிறைந்த உள்ளத்தில் கட்டப்பட்டிருக்கும் இன்பக் கோட்டைகள் தவிடு பொடியாகச் சிதறிவிடும் பொழுதும், வாழ்க்கை வானத்தில் சுடரொளி வீசிடும் நம்பிக்கை நட்சத்திரம் மங்கிவிடுகிறது. அப்பொழுது உள்ளத்தைப் பயங்கரமான இருள் கப்பிக் கொண்டு குழப்பத்தையும், தெளிவற்ற நிலையையும் உண்டுபண்ணிவிடுகிறது. உலக வாழ்வில் இருக்கும் பற்றுதலைக் குலைத்து, பாசமற்ற நிலையையும் வெறுப்பையும் தூண்டிவிட்டுவிடுகிறது. இந்த பயங்கர நிலைக்கு இட்டுச் செல்லப்படுபவர்கள் வாழ்வை மாய்த்துக் கொள்ள தற்கொலை செய்து கொள்ளுகிறார்கள். இதுபோன்றவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வருகிறது. இந்த நிலையை வளரவிடுவது வருங்கால மனித சமுதாய வளர்ச்சிக்குக் கேடு விளைவிப்பதாகும்.

* *

மனித வாழ்வு இன்பப்பாதையில் இடறின்றிச் செல்வதற்குத் தேவைப்படும் செல்வங்களையும், பொருள்களையும் இயற்கை வாரி வழங்கியுள்ளது. அது யாருக்கும் ஓரவஞ்சனை காட்டியதில்லை. மனித வர்க்கத்தில் தோன்றிக் கிடக்கும் சில தன்னல வாதிகள், இயற்கை வழங்கியிருக்கும் இன்பப்பொருள்களையும், வாழ்க்கை வசதிகளையும் தமக்கு உடைமையாக்கிக்கொண்டு மற்றவர்களை வஞ்சிக்கிறார்கள். இந்த வஞ்சகர்களின் போக்கினால் சமுதாயத்தில் மிகப் பெரும்பாலாருடைய வாழ்வு வறுமைக்காடாக்கப்பட்டுவிட்டது. இந்தக் கொடுமதியாளர்களின் செயல்கள் சமுதாயத்தை அரித்துத் தின்னுகிறது. இந்தக் கரையான்களின் வாயில் அகப்பட்டுத்தான், சென்னையில் வசித்து வந்த கோவிந்தசாமி என்ற அச்சுத் தொழிலாளி தற்கொலை செய்து கொண்டு மாண்டார். மறு வாரத்திலேயே மீண்டுமோர்செய்தி கிடைத்து அலிப்பூரைச் சேர்ந்த லீலாராம் வால்மீகி என்பார் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்ததாகவும், கயிறு அறுந்து விழுந்து விட்டபடியால் காப்பாற்றப்பட்டார் என்றும். வறுமைக் காட்டில் வாடிவதங்குவதால் சாவை முத்தமிட அண்டுவோர் மட்டுமில்லை. இந்த நாட்டில், இன்னுமோர் வகையினரும்உண்டு. அவர்கள்தான் துர்ப்பாக்கிய சூழ்நிலையில் சிக்கும் காதலர்கள்!

காதலாவது கத்தரிக்காயாவது என்று சிலர் கருதக்கூடும். மற்றும சிலரோ காதல் மிக சக்திவாய்ந்ததென்றும், "தெய்வீக" தன்மை பொருந்தியது—புனிதமானதுஎன்றெல்லாம் கதை அளக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுடையமகள், தன்னினும் கீழான அந்தஸ்திலும், ஜாதியிலும் உள்ள ஒருவனைக் காதலிக்க நேர்ந்து விட்டால், தெரிந்துவிடும், இவர்கள் காதலின் புனிதத்தன்மைக்கு அளிக்கும் கௌரவமும் மதிப்பும்! எனக்கும் இந்த காதல் விஷயத்தில் துளிக் கூட நம்பிக்கை ஏற்படுவதில்லை. அது அழியாத அமரத்துவம் பெற்றது என்பதை நான் ஒப்புக்கொள்வதும் இல்லை. ஆயினும், ஒன்றுபட்ட இரண்டு உள்ளங்களிடையே எழுகின்ற அன்பின் விளைவுகளுக்குத் தடைக்கல்லாக நிற்பதையும், வேலி கட்டி மறைப்பதையும் வெட்டி வீழ்த்தவேண்டும் என்று கருதுபவன் நான். காதல் உலகில் இன்ப கீதம் பாடி, உல்லாசமாகப் பறக்க விரும்புபவர்களுக்குச் சமுதாய சட்டதிட்டங்கள் தடை விதிக்கிறது. ஜாதீய பாகுபாடுகளையும், ஆச்சாரத்தை

யும், அந்தஸ்தையும் காட்டி மறுத்து விடுகிறது. இன்பக் கனவு காணும் காதலர்களுடைய மனப் போக்கை......இந்தத் தடையைத் தாண்ட சக்தியற்றவர்களும்—தகர்த்தெறிந்து விட்டு விடுதலை பெற்று வெளியேற உறுதியற்றவர்களும் தற்கொலை செய்து கொண்டு மடிந்து விடுகிறார்கள். கழனி மேட்டு காதலர்கள் கந்தன்—கருப்பாயி முதல், கல்லூரிக்காதலர்கள் கதிரேசன்—கமலா வரைக்கும் இன்னமும் மேற்கண்ட பாதையில்தானே போய்க்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாழப் பிறந்தவர்கள் தானே. வாழ்வுதான் கேட்கிறார்கள். சமுதாயமோ சாவை பரிசாகதருகிறது! இம்மாதிரி நிகழ்ச்சிகளை நாம் அடிக்கடி பத்திரிகைகளில் படித்துக்கொண்டும், கேள்விப்பட்டும் வருகிறோம்.

இந்த ரீதியில் வாழ்க்கையில் வெறுப்புற்று, இனியும் உலகில் மக்களோடு மக்களாக உலவுவது சரியில்லை என்று தெரிந்து கொண்டபின், பலர் தாமாகவே சாவைத்தழுவிமுத்தமிடுகிறார்கள். அதாவது தற்கொலை செய்து கொள்கிறார்கள். இதுபோன்ற சம்பவங்களை பார்க்கும் பொழுது அல்லது கேள்விப்படும் பொழுது நம்மில் பலர் பரிதாபப்படுகிறோம். “தற்கொலை செய்து கொள்வது கோழைத்தனம்; குழம்பிப் போன, நிலையற்ற உள்ளங் கொண்டவர்களின் போக்கு” என்று சிலர் வியாக்யானம் செய்கிறார்கள். “வாழ வழியற்றதுகள்-வக்கிரபுத்தி கொண்டதுகள்” என்று சிலர் வசை பாடுகிறார்கள். “கையாலாகாதவர்கள், சபோதிகள்” என்ற கடுமொழியால் சிலர் சாடுகின்றார்கள். இந்த தூற்றலும், கடும் மொழியும், அபிப்பிராயங்களும் எவ்வளவு தூரம் நியாயமானது என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

வாழ்க்கைத் துறையில் பின்னணியில் தாழ்ந்து கிடப்பவர்களை முன்னுக்குக் கொண்டுவர சமூகம் என்றுமே முயற்சித்ததில்லை. வறுமைக் காட்டில் வாடி வதங்குபவனை, வளமிக்க சோலையில் உலவுவான் திரும்பிக்கூட பார்ப்பதில்லை. அவனும் நம் உடன் பிறந்த தோழன் தானே-நம்மைப் போன்ற மனிதனாயிற்றே என்று நினைத்து அவனிடத்து அன்பு காட்டுவதில்லை. அவன் முன்னேற்ற பாதையில் தட்டுத் தடுமாறிக் கொண்டு அடியெடுத்து வைக்கும் பொழுது கைகொடுத்து தூக்கிவிடுவதுமில்லை. அதுதான் போகிறது என்றால், அவனை படுபாதாளத்தில் தள்ளி அழுத்தி வைத்திருக்கத்தானே எத்தனிக்கிறது இந்த பாழும் சமூகம். இந்த நன்றிகெட்ட சமூகத்தின் கூட்டுறவில் வாழ விரும்பாது தற்கொலை செய்து கொள்ளும் துர்ப்பாக்கிய நிலையில் உள்ளவர்களைப் பார்த்தாவது பரிதாபப்படுகிறதா? அது தான் இல்லை. அதற்கு மாறாக அவனை ஏசுகிறது—ஏளனமாக பேசுகிறது. ஒருவனுக்கு வாழ வசதி செய்து கொடுக்க முடியாத சமூகம் அவனுக்கிருக்கும் சாகும் உரிமையைக்கூட பறிக்கிறதே! இது என்ன நியாயம்?

உலகத்தில் மானத்தோடும், மனிதத்தன்மையோடும் கௌரவமாக வாழும் வகையை இழந்துவிட்ட ஒருவன், மானமிழந்து கேவலமான வாழ்க்கையை மேற்கொள்ள விரும்பாத பொழுதுதானே தானாகவே சாவை வரவேற்கிறான்? இவனை கோழையென்றும், அந்த செயலை முட்டாள்தனமானதும், அறிவற்றதுமாகும்-என்று எப்படிக் கூறமுடியும்? இப்படி தானாகவே சாவைத்தழுவி முத்தமிட எத்தனிக்கும் ஒருவன் சந்தர்ப்ப வசத்தால் சாவின் அணைப்பிலிருந்து மீட்கப்பட்டுவிட்டால், அரசாங்கம் அவனைச் சும்மாவிட்டு விடுகிறதா? ‘தற்கொலை செய்துகொள்ள முயற்சித்தது குற்றம்’ என்று கூறி, அவனைக் கூண்டில் நிறுத்தி வைத்து, தீர்ப்பு வழங்கி பத்து ஆண்டு-எட்டாண்டு என்றல்லவா, சிறையில் தள்ளி அவனைச் சிரழித்து வந்திருக்கிறது சட்டம்; இதுவரைக்கும். ஆனால் இதே சட்டம் சில நாட்களுக்கு முன்பு நிலைதடுமாறியும் விட்டது!

அலிப்பூர் மாஜிஸ்திரேட் முன் ‘தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தார்’ என்ற குற்றம் சாட்டி ஸீராம் வால்மீகி என்பவர் குற்றவாளிக் கூண்டில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டார். இவர் இரகசிய போலீஸ் காரியாலயத்தில் வேலை செய்து வந்தாரென்றும், கழுத்தில் சுருக்குமாட்டிக்கொண்டு தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்கையில் கயிறு அறுந்து விழுந்துவிட்டபடியால் மூர்ச்சையடைந்ததாகவும், பின்னர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டு காப்பாற்றப்பட்டாரென்றும் தெரிகிறது. இந்தக் குற்றவாளியின் முன்தான் சட்டம் வளைந்து கொடுத்துவிட்டது. தனக்கு அவரைத் தண்டிக்க உரிமையில்லை என்பதை உணர்ந்து!

‘ஒருவனைச் சந்தோஷமாக வாழவைக்க ராஜாங்கத்தால் முடியாவிட்டால், கஷ்டமான துக்ககரமான வாழ்க்கையை அவன் நடத்தியே தீரவேண்டுமென்று நிர்ப்பந்தமாகத் திணிக்கும் உரிமை ராஜாங்கத்திற்கு உண்டா’ என்ற வினாவை எழுப்பி, விடைகூறும் முகத்தான் உரிமையில்லை என்பதை தெளிவுபடுத்தி குற்றவாளியை விடுதலை செய்துவிட்டார் அலிப்பூர் மாஜிஸ்திரேட் திரு ஏ. கெ. ராஸ் என்பவர். இதன் மூலமாக தற்கொலை செய்து கொள்ள மனிதனுக்கு உரிமை வழங்கப்படுகிறது! இந்த உரிமை மனிதனுக்குத் தேவைதானா அல்லது தேவையற்றதா என்ற சர்ச்சை வேண்டியதில்லை. வாழ்க்கையின் சுய தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டு மகிழ்ச்சியோடு வாழ வகையற்ற ஒருவரைக் கட்டாயப்படுத்தி வாழ்ந்திருக்கும்படி செய்ய முடியுமா? அப்படி அவர் வாழ்ந்திருந்தாலும் மக்களுக்கோ, நாட்டிற்கோ அவரால் என்ன நன்மை விளையக்கூடும்? இதற்காக அவரைக் குற்றவாளியாகவே கருதி சிறையில் தள்ளி சிரழிக்க வேண்டுமென்று கூறவில்லை.

உலகில் உள்ள எல்லோரும் வாழப் பிறந்தவர்கள்தான். மக்களின் வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுத்து துணைபுரியவேண்டியது நாகரிக மிக்க அரசாங்கத்தின் நீங்காத கடமை. பிறருடைய நலனுக்கும் பொது நலனுக்கும் தீங்கு விளைவிக்காத வகையில் ஒரு மனிதன் எண்ணுகிற எண்ணமும், காணுகின்ற இன்பக் கனவுகளும், இலட்சியமும் வெற்றிபெற வேண்டியது இன்றியமையாதது. இதற்குத் துணைபுரியும் வகையில்தான் சமுதாய அமைப்பும் அரசாங்கமும் இருக்க வேண்டும். இம்மாதிரி மனி

தார்க்கு மனத்திருப்தியையும், மகிழ்ச்சியையும் உண்டுபண்ண முடியாத அரசாங்கத்திற்கு அவனை துயர வாழ்வில்வதியும்படி வற்புறுத்த என்ன உரிமை இருக்க முடியும்? இப்படி நிர்ப்பந்திக்கப் பட்டவர்கள் நேர்மையோடும் ஒழுங்குடனும் வாழ்வார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும். இதுபோன்ற இக்கட்டான சூழ்நிலையில் தள்ளப்பட்டவர்களும், எப்படியாவதுவாழவேண்டும் என்ற ஆசைக்கு அடிமைப்பட்டவர்களும் தானே கொலைகாரர்களாகவும், கொள்ளைக்காரர்களாகவும், கபடசன்யாசிகளாகவும், பெண்களாயின் விபசாரிகளாகவும், வேசிகளாகவும் நாட்டில் உலவுகின்றார்கள்? இந்த நிலை மட்டும் நலம் பயக்குமா?

தற்கொலை செய்து கொள்வது ரொம்ப அநாகரீகமான செயல்தான். சுதந்திரநாடு என்று கூறப்படும் இங்கு வறுமையால்—வாழ்க்கை வசதிகள் வஞ்சிக்கப்பட்ட காரணத்தால்—ஏழ்மையின் கொடுமையால்—இன்ப வாழ்வு நடத்த முடியாத காரணத்தால், ஆசைக் கனவுகள் வெற்றி பெற முடியாது போகவே உள்ளம் ஒடிந்துவிட்டபடியாலும் தற்கொலை செய்து கொள்வோரின் தொகை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போகிறது. இந்த வளர்ச்சி வெட்கப்பட வேண்டியதும்—வேதனைத் தரக்கூடியதுமாகும். இதற்குக் காரணம் கோலோச்சுபவர்களின் திறமையற்ற போக்கும், தெளிவான கொள்கையற்ற திட்டங்களும் தான். இந்த விபரீதப் போக்கைத் தடுக்க சட்டத்தால் முடியாது—அதனால் சிலரைத் தண்டித்துச் சிறைக்கூடத்தில் தள்ளி அவர்கள் வாழ்வைச் சீரழிக்கத்தான் முடியும். இதற்குச் சரியான பரிகாரம் மக்களின் வாழ்வை வளமுடையதாகச் செய்வது தான். இதற்கு மக்கள் நல்வாழ்வில் அக்கரையுள்ள நல்லறிவாளர்களும், அரசாங்கமும் முயற்சிக்க வேண்டும். முயற்சிப்பார்களா?

மக்கள் மனதில் மண்டிக்கிடக்கும் மனக்குறைகளையும், கவலையையும் போக்கி, இன்பவாழ்விற்கு சமுதாயத்தை இட்டுச்செல்லும் புதியதோர் சமுதாய அமைப்பு என்று உண்டாகுமோ? தனிமனித வாழ்விற்கு உத்திரவாதமளிக்கும்


புலவர் குழந்தையவர்களின்
உணர்ச்சியும் எழுச்சியுமிக்க

**தமிழ் வாழ்க**

எனும் அரியதோரு நாடக நூல் நம்மிடம் கிடைக்கும். விலை அணா 0—8—0. வியாபாரிகளுக்கு 25% கழிவு உண்டு.

மானேஜர்
குடி அரசு, ஈரோடு.


## பகுத்தறிவியக்க வெளியீடுகள்.

| | | | |
|---|---|---|---|
| திராவிட நாடு | 2 | 0 | 0 |
| ● The Crux of the Indian Problems (By R. P. Paranj Pye M. A. D. Sc) | 1 | 0 | 0 |
| கோகிலராணி | 1 | 0 | 0 |
| பணம் பிடுங்கிப் பார்ப்பனர் | 0 | 14 | 0 |
| தத்துவவிளக்கம் | 0 | 12 | 0 |
| ● These 18 Months (By Nilkan Perumal) | 0 | 8 | 0 |
| ஞானசூரியன் | 0 | 8 | 0 |
| தில்லையில் பெரியார் | 0 | 8 | 0 |
| மறுமலர்ச்சிக் கவிதைகள் | 0 | 8 | 0 |
| ● இந்தியாவின் குறைபாடுகள் | 0 | 8 | 0 |
| ● பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு. (ஆங்கிலம்) | 0 | 8 | 0 |
| ● பெண் ஏன் அடிமையானாள் | 0 | 8 | 0 |
| பலசரக்கு மூட்டை | 0 | 8 | 0 |
| பாலகாண்டம் | 0 | 8 | 0 |
| விழாவும் நாமும் | 0 | 8 | 0 |
| தமிழ் வாழ்க | 0 | 8 | 0 |
| இந்திப் போர் முரசு | 0 | 6 | 0 |
| நமக்கு வேண்டியது எது? சமதர்ம ராஜ்யமா? சுயராஜ்யமா? | 0 | 6 | 0 |
| ● கர்ப்ப ஆட்சி | 0 | 6 | 0 |
| பெரியார்பெருந்தொண்டு | 0 | 6 | 0 |
| வெளியேறு | 0 | 6 | 0 |
| இதோ பெரியாரில் பெரியார் | 0 | 6 | 0 |
| திராவிட நாட்டுப் பாடல்கள் | 0 | 6 | 0 |
| கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்? | 0 | 5 | 0 |
| பிரகிருதி வாதம் | 0 | 5 | 0 |
| திராவிடர் கழக லட்சியம் | 0 | 4 | 0 |
| மொழி எழுத்து | 0 | 4 | 0 |
| நமது குறிகோள் | 0 | 4 | 0 |
| ● பகுத்தறிவு அல்லது மரணசாஸனம்2ம்பாகம் | 0 | 4 | 0 |
| ● வால்டையரின் வாழ்க்கைச் சரிதை | 0 | 4 | 0 |
| கார்ல் மார்க்ஸ் | 0 | 4 | 0 |
| சமதர்ம உபன்யாசம் | 0 | 4 | 0 |
| பரிதாபத்திற்குரிய பஞ்சமர்கள் | 0 | 4 | 0 |
| இரண்டுவழிகள் | 0 | 4 | 0 |
| அய்யாமுத்துகட்டுரைகள் | 0 | 3 | 0 |
| அகஸ்தியர் ஆராய்ச்சி | 0 | 3 | 0 |
| நான் கிறிஸ்துவனல்ல ஏன் | 0 | 3 | 0 |
| சோஷியலிசம் | 0 | 3 | 0 |
| இலங்கை உபன்யாசம் | 0 | 3 | 0 |
| இராமாயணப் பாத்திரங்கள் | 0 | 3 | 0 |
| உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை? | 0 | 3 | 0 |
| இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து! | 0 | 2 | 0 |
| இதிகாசங்கள் புகட்டும் நீதி | 0 | 2 | 0 |
| உண்மைத் தொழிலாளி யார்? | 0 | 2 | 0 |
| ராமலிங்க சுவாமி பாடல் | 0 | 2 | 0 |
| திராவிடர்-ஆரியர் உண்மை | 0 | 2 | 0 |
| இனிவரும் உலகம் | 0 | 2 | 0 |
| ● தமிழ் இசை-நடிப்புக் கலைகள் | 0 | 1 | 0 |
| ● சமதர்மக் கீதங்கள் | 0 | 1 | 0 |
| ● இந்திராணி பால சுப்பிரமணியம் சொற்பொழிவு | 0 | 1 | 0 |

கிடைக்குமிடம்:-
குடி அரசு, ஈரோடு.

மக்களின் சர்க்கார் என்றுதான்
இந்த நாட்டில் ஏற்படுமோ?
—புத்ததாசன்

அச்சிட்டு வெளியிடும் ஆசிரியர் என். கரிவரதசாமி. தமிழன் அச்சகம். 59. கச்சேரி வீதி, ஈரோடு.